Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (06.08.2013) பக்கங்கள் 20 ஓசை – 310



அவலத்தின் மீது (02)



அனுகூலம் (06)



சரியான தெரிவு (07)



அவதாரம் (08)



புகைமீது மோகம் ஏன்? (18)

# பிரிவினையை முன்னெடுக்க சர்வதேச மட்டத்தில் சதி



## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

30 ஆண்டுகளாக நாட்டைப் பீடித்திருந்த யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்த போதிலும் சர்வதேச மட்டத்தில், இலங்கையில் பிரிவினையை முன்னெடுப்பதற்கு சில சக்திகள் சதிசெய்வதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. கட்டுகஸ்தோட்டையில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 30 ஆண்டுகள் நாட்டைப் பீடித்திருந்த யுத்தத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார். இன்று நாட்டில் குண்டு வெடிப்பதில்லை. நாட்டின் நாலாபுறத்திற்கும் செல்ல முடியும். ஆனாலும் சர்வதேச மட்டத்தில் இன்னும் பிரிவினையை முன்னெடுக்க சில சக்திகள் தீவிரமாக உழைத்துக்கொண்டுள்ளது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் நாம் சர்வதேசத்திற்கு எமது நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும்.

அதனால் வடமாகாண சபைத் தேர்தல் எமது நாட்டுக்கு மிக முக்கியமானதாகும். சர்வதேசத்தில் எமது நாட்டிக்கு எதிராக செயறபடுபவர்கள் பல கனவுக் கோட்டைகளை கட்டியுள்ளனர். முப்பது வருடகால யுத்தத்தால்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இரண்டு நாள் பயணமாக யாழ். வரும் அமைச்சர் ராஜித

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன இரண்டுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி சேந்தாங்குளத்திற்கு விஜயம் செய்யும் அமைச்சர் படகுகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் முதலியவற்றை அப்பகுதி கடற்றொழிலிலாளர் குடும்பங்களுக்கு வழங்கிவைப்பதுடன் சுழிபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இளைப்பாறு மண்டபம் துறைமுகம், வீதி என்பனவற்றைத் திறந்து வைக்கவுள்ளதுடன் பலாலி மற்றும் வடமராட்சிப் பகுதிக்கும் விஜயம் செய்ய

(19) ஆம் பக்கம் பார்க்க

## வெலிவேரி தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்


உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கு அரசாங்கம்துப்பாக்கிச் சூடு அந்த அடக்குமுறைக்கு எதிராக போராடுவோம் என சூளுரைத்து நேற்று மாலை ஜனநாயக மக்கள் இயக்கம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி.யின் நாடாமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தொழிற் சங்கவாதிகள் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து

(19) ஆம் பக்கம் பார்க்க




## ஜனாதிபதியின் இணைப்பாளராக சுடரொளியின் ஆசிரியர்



யாழிலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் சகோதர நிறுவனமான சுடரொளியின் ஆசிரியர் சிவராசா தமிழ் ஊடகங்களிற்கான ஜனாதிபதியின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ளார். வீரகேசரி பத்திரிகையில் ஊடக செயற்பாட்டை ஆரம்பித்த ஆர்.சிவராஜா சக்தி தொலைக்காட்சி, தினக்குரல் பத்திரிகை என்பனவற்றிலும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## குடிநீர்ப்பிரச்சினைக்கு தீர்வு துப்பாக்கி; அரசு மீது பாய்கிறது ஐ.தே.க.

வெலிவேரிய மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு அரசு துப்பாக்கி முனையில் தீர்வை வழங்கியுள்ளது. அதனைக் கண்டிக்காது மாவிலாற்றில் தண்ணீர் பிரச்சினையை மையமாக வைத்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை தூண்டிய ஹெலஉறுமய போன்றவர்கள மௌனம் காப்பது வேடிக்கையாகவுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார். இராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவிய்லாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் பொய், வாய்ப்பேச்சுகள் மற்றும் மக்கள் விரோத செயற்பாடுகள் எல்லாம் வெலிவேரியவில் இடம் பெற்ற சம்பவத்துடன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய தேர்தல் பிரதிநிதிகள் ஐ.ம.சு. முன்னணி வேட்பாளர்கள் சந்திப்பு



பொதுநலவாய நாடுகளின் தேர்தல் செயலகப் பிரதிநிதிகள் வடபகுதிக்கு விஜயம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு வேட்பாளராக வாரி இறைக்கப்பட்ட 50 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்ட வேட்பாளராக களமிறங்குவதற்காக பிரபல வர்த்தகரும், கனடா குடியுரிமை பெற்றவருமான ஒருவர், கூட்டமைப்பிலுள்ள கட்சியொன்றின் தலைவருக்கு 50 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாக இணையத்தளமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு தகுதியான பலர் இருந்தபோதிலும் குறித்த கட்சிக்கு வழங்கிய பங்கீட்டின் அடிப்படையில் மேற்படி நபருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைத்துள்ளது. இதற்காக அவர் 50 இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியதாகவும் தெரியவருகிறது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# அவலங்களின் மீது அரசியல் நாடகம்

# கூட்டமைப்பின் போக்குக்கு பதிலடி

## ஈ.பி.டி.பி.யின் அரசியல் பீடம் அறிக்கை

அமைச்சர் டக்ளஸ் தேவானநதாவின் கடும் உழைப்பினால் உயர் பாதுகாப்பு வலயங்கள் மீட்கப்பட்டுவருவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கும் கூற்றுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் பீடம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,...

எமது மக்களின் நிலங்கள் எமது மக்களுக்கே சொந்தம். இதை இலக்காக கொண்டு, எமது வழிமுறையில் நின்று எமது மக்களின் நிலங்களை மக்களிடமே மீட்டுக்கொடுப்பதில் நாம் படிப்படியாக வெற்றி கண்டு வருகின்றோம்.

இதை கண்டு அச்சப்படுகின்ற கூட்டமைப்பு, டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அழுத்தங்களால் மக்களின் நிலங்கள் மீட்கப்படவில்லை என்றும்,

நவநீதப்பிள்ளையின் வருகையை ஒட்டி, சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டுவதற்காகவே மக்களின் நிலங்கள் மீட்கப்படுவதாக ஒரு கதையும்,...

தேர்தல் பிரச்சாரத்திற்காகவே நிலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன என்று இன்னொரு கதையினையும்,...

கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இரு வேறு கதைகளை ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார்.

இந்த இரு வேறு காரணங்கள் மட்டுமல்ல, இன்னும் பல் வேறு காரணங்களை கட்டவிழ்த்து விட்டு ஈ.பி.டி.பி க்கும் எமது மக்களின் நில மீட்புக்கும் சம்பந்தம் இல்லை என்று மக்களுக்கு பொய்யுரைத்து,...

'கறையான்கள் கஷ்டப்பட்டு புற்றெடுக்க, கருநாகங்கள் குடி புகுந்த கதையாக,' தமது சொந்த வாழ்விடங்களில் மீள் குடியேறி வரும் எமது மக்களின் மகிழ்ச்சிக்கு தாமே காரணம் என்று உரிமை கோர எத்தனிக்கிறது கூட்டமைப்பு.

எமது மக்கள் மீள் குடியேறி வருவது கூட்டமைப்புக்கு மகிழ்ச்சி தரும் விடயமாக இருந்திருந்தால், யார் குற்றியும் அரிசியானால் சரி என்ற நல்ல சிந்தனையில் மீள் குடியேற்றங்களை மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்க வேண்டும்.

ஆனாலும், ஈ.பி.டி.பி.யின் மீது கொண்டிருக்கும் அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் எமது கட்சியின் அர்ப்பணம் மிக்க உழைப்பை கொச்சைப்படுத்த நினைத்த கூட்டமைப்பின் பேச்சாளர் மக்களின் மீள் குடியேற்றம் மகிழ்ச்சி தரும் விடயம் என்று ஒரு வார்த்தையேனும் ஊடகங்களுக்கு கூறியிருக்கலாம்.

எமது மக்களின் நிலங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று போலித்தனமாக கோசம் எழுப்பி வரும் கூட்டமைப்பு, படையினர் எமது நிலங்களில் இருந்து வெளியேறி விடக்கூடாது என்ற வழமையான தமது சுயலாப விருப்பங்களை கொண்டிருப்பதாகவே வெளிப்படுத்தியுள்ளனர்.

சொந்த நிலங்கள் பறிக்கப்பட்டு விட்டன என்று எமது மக்களின் அவலங்களை காட்டி அதில் தமது தேர்தல் வெற்றியை பெற்று விடலாம் என்ற சுயலாப அரசியலில் கூட்டமைப்பு வழமைபோல் இறங்கியுள்ளது.

ஆனாலும்,... எமது மக்களின் நிலங்களை மீட்டுக்கொடுத்து மக்களின் மகிழ்ச்சியை மட்டுமே எமது அரசியல் இலக்காக கொண்டிருக்கின்றது ஈ.பி.டி.பி.

மக்களின் மகிழ்ச்சியை வைத்து நாமும், மக்களில் அவலங்களை வைத்து கூட்டமைப்பும் செயற்பட்டு வருவது எமது மக்களுக்கே வெளிச்சமான விடயம். இதில் யார் மக்களின் நண்பர்கள் என்பதை மக்களே தீர்மானிப்பது என்பது உறுதியாகி விட்டது.

2009 மே 18 இற்கு பின்னர் நாம் தொடர்ச்சியாகவே தேர்தல் நடக்காத சூழ்நிலையில் கூட எமது மக்களின் நிலங்களை மீட்டெடுத்து வந்திருக்கின்றோம்.

ஆகவே, தேர்தலுக்காகவே நிலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன என்பது எமது கட்சியின் மீது கூட்டமைப்பு கொண்டிருக்கும் அரசியல் காழ்ப்புணர்ச்சி என்ற விடயத்தை வெளிப்படுத்துகிறது.

அழுதும் பிள்ளையை அவளே பெறவேண்டும். எமது மக்களின் அவலங்களை தீர்க்க இங்கு யாரும் வரப்போவதில்லை.

அப்படி வருவதாக இருந்திருந்தால், எமது மக்கள் முள்ளிவாய்க்கால் வரை அவலங்களை அள்ளி சுமந்து சென்ற போது வெளியுலகம் இங்கு வந்திருக்க வேண்டும்.

எல்லாம் முடிந்த பின்பே வெளியுலகம் இங்கு வேடிக்கை பார்க்க வந்தது. கூட்டமைப்பின் குரல் கேட்டு வெளியுலகம் இங்கு வந்திருக்கவில்லை. அவ்வாறு வெளியுலகம் வரவேண்டும் என்று கூட்டமைப்பு விரும்பி குரல் கொடுத்திருக்கவும் இல்லை.

அப்போது 22 நாடாளுமன்ற உறுப்புரிமைகளை கொண்டிருந்த கூட்டமைப்பு தமது நாடாளுமன்ற உறுப்புரிமைகளை ராஜினாமா செய்து தமது எதிர்ப்பை காட்டியிருந்தாலும் வெளியுலகம் இங்கு வந்திருக்க போவதில்லை.

அவ்வாறு தமது நாடாளுமன்ற சுக போகங்களை துறந்து எமது மக்களை காப்பாற்ற கூட்டமைப்பு விரும்பியிருக்கவும் இல்லை.

ஆகவே, வெளியுலக அழுத்தங்களுக்கு அஞ்சியே மீள் குடியேற்றங்கள் இங்கு நடப்பதாக கூட்டமைப்பு கூறுவதில் உண்மையும் இல்லை.

கோழி கூவி பொழுது விடிந்ததாக சொல்வது போல் தாம் கூறியே எதுவும் இங்கு நடப்பதாக கூட்டமைப்பு கூறுவது வெறும் தேர்தல் பிரசாரமே.

நாம் சொல்வதை செய்து வருகிறோம், செய்வதையே சொல்லியும் வருகிறோம்.

வட தேச விடி வெள்ளியாக திகழப்போகும் வடக்கு மாகாண சபையின் அரசியல் அதிகாரங்களை மக்கள் எமக்கு பெற்றுக்கொடுத்து எமக்கு ஆணை வழங்கும் போது,...

அதன் மூலம் அரசியல் பேரம் பேசும் சக்தியை எமது மக்கள் எமக்கு வழங்கும் போது,...

இழந்து போன எமது மக்களின் அனைத்து நிலங்களையும் நாம் எமது மக்களுக்கே மீட்டுக்கொடுப்போம்.

எமது அரசியல் பலத்தை வைத்தும், எமது இணக்க அரசியல் வழி முறை மூலமும் ஜனாதிபதியை இணங்க வைத்து எமது மக்களை பலாலி வரை கொண்டு சென்று நாம் குடியேற்றுவோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் பீடம் விடுத்திருக்கும் அந்த அறிக்கையில், போலியான எதிர்ப்பு அரசியல் ஒரு சாண் நிலத்தை கூட எமது மக்களுக்கு பெற்றுக்கொடுத்திருக்கவில்லை என்றும், நிலங்களை மீட்பது மட்டுமன்றி எமது மக்களின் அரசியல் உரிமைகளை பெறுவதற்கும் எமது ஆக்க பூர்வ இணக்க அரசியலே வரலாற்று சாதனைகளை படைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செல்வச்சந்நிதியில் தாகசாந்தி நிலையம்

(அச்சுவேலி)

பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதி வீதிப் பகுதிகள் யாவும் அப்பகுதி மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருவதுடன், தாகசாந்தி நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளிலும் அவ்வூர் இளைஞர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன் ஆலய வெளி வீதிப்பகுதிகளிலும் தூய்மை பேணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இம்முறை திருவிழாவிற்கு பெருமளாவான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (85)

## ஆடிப்பூர விழா

(அளவெட்டி)

அளவெட்டி மேற்கு, நாகேஸவரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு அபிசேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம்பமாகும். முற்பகல் 10. மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று ஸ்ரீமத் நாராயணர், ஸ்ரீதேவி, பூமாதேவி புடைசூழ வீதியுலா எழுந்தருள்வார்.

மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம் பெறும். (68)

# கைத்தொழில் கண்காட்சி கைதடியில் நாளை

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் தொழிற்துறைத் திணைக்களம் ஆகியவை இணைந்து நடாத்தும் மாகாணக் கைத்தொழில் கண்காட்சி நாளை முதல் இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

கைதடியில் உள்ள நவீல்ட் பாடசாலையில் நாளைய தினம் காலை 9 மணியளவில் இக்கண்காட்சி ஆரம்பமாகிறது.

கைத்தொழிற்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் பொது மக்கள் இக்கண்காட்சியில் பங்குபற்றி பயன்பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# வீதி விபத்தில் மீசாலை வாசி படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கருகில் பிரதான வீதியில் நேற்றுக்காலை கயஸ் வாகனமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவன் படுகாயமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த ஆர்.மிதுனன் (வயது - 23) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணையை மேற்கொண்டுள்ள பொலிஸார் விபத்தில் சிக்கிய கயஸ் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை யாழ். பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா,33)

# திருடர்கள் தொல்லை மானிப்பாயில் அதிகம்

## பட்டப்பகலில் கைவரிசை

(சுன்னாகம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு. அருகாமையில் உள்ள வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வீட்டில் பட்டப்பகலில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை 9 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டுப்பெண்மணி மரக்கறி வாங்க்ச் சென்ற சமயம் வீட்டில் யாருமில்லாத சந்தர்ப்பமாகக் கொண்டு வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான தங்க நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டுப்பெண்மணி மானிப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து மானிப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று விசாரணைக்ளை மேற்கொண்டுள்ளன்ர். (66)





யாழ். புதிய சோனகத்தெரு பகுதியில் தற்காலிகமாக மீள்குடியேறியுள்ளவர்களுக்கும், விதவைகளுக்குமான ரம்ழான் உலர் உணவுப்பொருட்களை கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம்.ரஹீமின் உள்ளிட்ட பிரதிநிதிகள் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவதைக் காணலாம். (105)

# கிளிநொச்சி பொதுச்சந்தையில் அடிக்கடி நீர்த்தட்டுப்பாடு

## விசனமடையும் வர்த்தகர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் அடிக்கடி நீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதால் இச் சந்தைப் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் பல்வேறு அசௌகரியங்களை தாம் எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் அடிக்கடி நீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன், வர்த்தக நடவடிக்கைகளும் பாதிக்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சந்தைப் பகுதியில் இயங்கும் உணவகங்கள் நீர்த்தட்டுப்பாட்டால் சிற்றுண்டி விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் உணவக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நீர்த்தட்டுப்பாட்டால் இதர செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைவதாகவும், இதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் விசனமடையும் வியாபாரிகள் நீர்த்தேவை அவசியமானதொன்றாக காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இச்சந்தைப் பகுதி வர்த்தக நிலையங்களுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டமை பெரும் குறைபாடாக உள்ளதாகவும், மின்விநியோகம் இன்மையால் வர்த்தகர்கள் மாலை வேளையில் குறிப்பிட்ட நேரத்துடன் வர்த்தக நிலையங்களைப் பூட்ட வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனினும் சில வர்த்தகர்கள் சட்டவிரோதமாக மின்சார விநியோகத்தைப் பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கும் வர்த்தகர்கள் இவ்வாறான நடவடிக்கைகளால் மின் ஒழுங்கு ஏற்படும் அபாய நிலையும் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, கிளிநொச்சி சந்தை வர்த்தகர்களின் நலனைக் கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

## கவிதைச் செயலமர்வு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் கவிதைச் செயலமர்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள தகுதி வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு 10 அமர்வுகளாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுடையவர்கள் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# வரணிப் பகுதியில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள்

(வடவரணி)

அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் வரணிப் பிரதேசத்தில் சற்றுக் குறைவடைந்திருந்தது. தற்போது மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த புதன்கிழமை மாசேரிப்பகுதியில் வீடு ஒன்றில் இரவு வேளை உள்நுழைந்த திருடர்கள் வீட்டு உரிமையாளர் இல்லாத காரணத்தால், வீட்டுக்காரர் காவலுக்கு ஒருவரை இரவு அழைத்திருந்த சமயம் பார்த்து சுமார் 11 மணியளவில் காவலாளியை மிரட்டி வைத்துக்கொண்டு திருட முற்பட்டபோது வீட்டுக்காரர் விழிப்படைந்து கூக்குரல் இட்டபோது திருடர்கள் முயற்சி பலன் இன்றித் தப்பி ஓடும் போது வீட்டுக்காரப் பெண்மணியின் தங்க வளையல்களை உருவி எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, மீண்டும் வரணிப் பிரதேசத்தில் திருட்டுப் பேர்வழிகள் தங்கள் கைவரிசையை காட்ட முன்வந்துள்ளதால் பொதுமக்கள் விழிதூக்கமின்றிய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

# கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் சிறப்புற நடைபெற்ற நடமாடும்சேவை

(அச்சுவேலி)

கோப்பாய் பிரசேத செயலகத்தில் கபே அமைப்பின் அனுசரணையுடன் நேற்றுமுன்தினம் நடமாடும் சேவை இடம்பெற்றது. இதில் அடையாள அட்டை புதுப்பித்தல், தொலைந்த அடையாள அட்டை பெறல் மற்றும் திருமணப் பதிவு, பிறப்புச் சான்றிதழ் பெறல உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்றன.

இதில் அடையாள அட்டைக்கான புகைப்படம் மற்றும் முத்திரை, பொலிஸ் அறிக்கை சத்தியக்கடதாசி என்பன இலவசமாக வழங்கப்பட்டன.

இதில் அச்சுவேலி,கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், சிறுபப்பிட்டி புத்தூர், ஆவரங்கால் போன்ற பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் பிறப்புச் சான்றிதழைப் பெறுபவர்கள் அதற்கான விண்ணப்பம் படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்து ஒரு மணித்தியாலத்திற்குள் பிறப்புச் சான்றிதழைப்பெற்றனர். இச சேவைக்கு பிரதேச செயலக ஊழியர்கள், பட்டதாரி பயிலுநர்கள், ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தகள் மற்றும் படப்பிடிப்பாளர்கள் போன்றோர் கலந்து கொண்டு இச்சேவையினை பொது மக்களுக்கு வழங்கினர்.

மேலும் அந்தந்தப் பிரிவு கிராம சேவையாளர்கள் மூலம் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு கிராம அலுவலரினால் உறுதிப் படுததப்பட்ட கையொப்பத்துடன் விண்ணப்பங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், இவர்களுக்கான புதிய அடையாள அட்டைகள் யாவும் ஒருமாத காலத்திற்குள் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்நடமாடும் சேவை யில் 500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (85)

# 125 ஆவது ஆண்டு நிறைவும் சயம்பு மலர் வெளியீடும்

(காரைநகர்)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சயம்பு மலர் வெளியீடும் கடந்த வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திலிருந்து விருந்தினர்கள் நாதஸ்வர, தவில் மற்றும் மேலைத்தேய வாத்திய இசை முழங்க நடராஜா ஞாபகார்த்த மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

கலலூரி அதிபர் பாடசாலைக் கொ்டியினையும் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி வி.விஜயரத்தினம் தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தனர்.

கல்லூரி அதிபர் வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற 125 ஆவது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் சயம்பு மலரினை வெளியிட்டு வைத்தார். (10)

# ஆடிப்பூர விழா

அல்வாய் கிள்ானை மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தில் ஆடிப்பூர திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமையும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

இதன்படி நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சக்தி கொடி ஏற்றுதல், தொடர்ந்து யாக ஆரம்ப பூசை நடைபெறும்.பின்னர் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு சிறப்பு அபிஷேகம், தொடர்ந்து அன்னைக்குப் பாலாபிஷேகம், திருவடிகளுக்குப் பாத பூசை செய்தல், 11 மணிக்கு கலச விளக்கு யாகபூசை நண்பகல் [illegible] மணிக்கு கஞ்சி படைப்பு தொடர்ந்து பூசை அன்னதானம் என்பனவும் இடம்பெறவுள்ளது. அடியார்கள் இவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு சக்தி பீடத்தினர் அழைத்துள்ளனர்.

# யாழ். ஜின்னா மைதானத்தில் நோன்புப் பெருநாள் தொழுகை

யாழ். முஸ்லிம்களின் நோன்புப்பெருநாள் தொழுகை யாழ் ஜின்னா மைதானத்தில் நோன்புப்பெருநாள் நாடைபெற உள்ளது.

ஞாயிறு மாலை யாழ். மொஹ்தீன் ஜும்மா பள்ளிவாசலில் யாழ். உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் அடங்கிய விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

யாழ். உலமாசபை தலைவர் ஏ.எம்.ஏ.அஸீஸ் செயலாளர் மௌலவி ரோசான் ஏனைய உலமாக்களுடன் பள்ளிவாசல் தலைவர்களான எம்.ஏ.ஸி முபீன், எம்.யூ.எம் தாஹிர் ஏ.எச் ஜமால், ஏ.எச்.பிர்தவ்ஸ், எம்.எல் லாபிர், எம்.ரி.கியாத் மற்றும் எம்.ஆப்தீன், எம்.சாலிஹ் ஆகியோர் இவ் விசேட கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆண்களுக்கு ஜின்னா மைதானத்திலும், பெண்களுக்கு ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்திலும் யாழ். உலமாக்களினால் விசேட பெருநாள் ஜிம்மா பிரசங்கமும், தொழுகையும் காலை 6.30 மணிக்கு நடைபெறுவதாகவும் தீர்மானிக்கப்பட்டன.

பெருநாள் தொழுகைக்கான ஏற்பாடுகளையும் யாழிலுள்ள சகல பள்ளிவாசல் நிர்வாகிகள் மேற்கொள்வார்கள். (105)

# தாகசாந்தி நிலையம்

(அச்சுவேலி)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நதி ஆலய வருடாந்து உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதை அடுத்து சந்நிதி வீதிப்பகுதிகள் யாவும் அப்பகுதி மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருவதுடன் தாக சாந்தி நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளிலும் அவ்வூர் இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் ஆலய வெளிவீதிப்பகுதிகளும் தூய்மை பேணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இம்முறை திருவிழாவிற்கு பெருமளவான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (85)

# சுகாதார சீர்கேட்டில் கழிவு நீர்வாய்க்கால்

(அச்சுவேலி)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் குறிப்பாக ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள கடைத் தொகுதிகளுக்கு அருகில் உள்ள கழிவுநீர் போகும் வாய்க்காலானது கழிவு நீருடன் சுகாதாரமற்ற முறையில் எவராலும் கவனிக்கப்படாத நிலையில் காணப்படுவதாக பாதசாரிகளாலும், ஏனைய பயணிகளாலும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோய் பரவும் அபாய நிலை காணப்படுவதுடன் துர்நாற்றம் வீசுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஏற்கனவே பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்தும், இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்தவில்லை. எனவே இக் கழிவு வாய்க்காலைத் துப்புரவு செய்து உதவுமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இதயத்தைத் தொலைத்தவர்கள்!

ஆங்கில நகைச்சுவைத் துணுக்கு ஒன்று.

ஒன்றாகப் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்கள், தங்கள் திறமையை சற்று மிகைப்படுத்திப் பேசிக் கொண்டனர்.

முதலாமவர், "நான் நான்காவது மாடியிலிருந்து விழுந்த பெண்ணைக் காப்பாற்றி, பிளாஸ்டிக் சேர்ஜரி செய்து உலக அழகியாக்கினேன்" என்றார்.

இரண்டாமவர் சொன்னார், "யுத்தத்தில் இரு கால்களையும் இழந்த ஒருவருக்குச் சிகிச்சை செய்து செயற்கைக் கால்கள் பொருத்தி ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வாங்கச் செய்தேன்".

மூன்றாவது மருத்துவர் சொன்னார்: "இதெல்லாம் என்ன பெரிய வேலை? நான் ஏழெட்டு மூளை ஒப்பரேஷன் செய்யும் போது மூளையை உள்ளே வைக்காமல் தைத்துவிட்டேன். அப்படித் தைக்கப்பட்டவர்கள்தான் இப்போது பெரிய பெரிய தலைவர்கள்!"

அதை வெறும் நகைச்சுவைத் துணுக்காக அலட்சியப்படுத்திவிட முடியவில்லை. நமது பாரம்பரியத் தலைமைகளைப் பார்க்கும்போது, மூளைகளை வைக்க மறந்துவிட்டதாகத் தெரியவில்லை; அது சுயநலத்திற்காக நன்றாகவே வேலை செய்கிறது. ஆனால் அவர்களது இதயங்களைத்தான் யாரோ மருத்துவர்கள் மறந்து வெளியே எடுத்து வைத்துவிட்டார்களோ என்று தோன்றுகிறது.

30 வருட போருக்குப் பின்னர் அடிப்படை வசதிகளுக்கும் வாழ்வுக்கான ஆதார கட்டுமானங்களுக்கும் உழந்துலைந்து காத்திருக்கும் பெரும்பான்மைத் தமிழ் மக்களுக்கு இவர்கள் என்ன சொல்கிறார்கள். 'இந்த நாட்டில் தீர்வு வராது; இங்கு தமிழ்மக்கள் வாழ முடியாது' என்பதையே சுத்திச் சுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் மக்கள் ஆபத்தான படகுகளில் ஏறியாவது—வழியில் கடலில் மாண்டுபோகிறவர்கள் போக—வெளிநாடுகளுக்குப் போய்விடுவதே உள்ள வழி என்று ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மீந்திருப்பவர்கள் தேர்தலுக்குத் தேர்தல் தங்களைத் தெரிவு செய்து பதவிகளுக்கு அனுப்ப ஒற்றுமையைக் காட்டுங்கள், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேசத்தை அழைத்து வருகிறோம் என்று பேய்க்காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அதிக உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றி வைத்திருப்பவர்கள், அரசாங்கத்தின் குறைபாடுகளைத் தேடித் தேடிச் சொல்லிக்கொண்டிருப்பதே போதும் என்று கருதுகிறார்கள்.

மக்களின் அவலங்களைச் சென்று பார்க்கவோ, அவர்களது கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு ஏதாவது செய்யமுடியுமா என்று முயற்சிக்கவோ இவர்கள் தயாரில்லை. மக்கள் கஷ்டப்பட கஷ்டப்பட அதை அரச எதிர்ப்பாக எப்படி மாற்றுவது என்றும், அந்த எதிர்ப்புணர்வுதான் தங்களுக்கு தேர்தலில் வாக்குகளைக் குவிக்கும் என்று நினைத்துமே இவர்கள் செயற்பட்டுவருகிறார்கள்.

மக்களைப் போய்ப் பார்ப்பதோ, அவர்களது கஷ்டங்களை தெரிந்துகொள்வதோ, குறைகளைத் தீர்க்க முயல்வதோ இவர்களது சிந்தனையில் வருவதில்லை. மக்களிடம் போய் அவர்கள் கஷ்டங்களை மாற்றுவதை விட காரில் போய் ரவுண்டில் இறங்கி சுலோக அட்டைகளைப் பிடித்துக்கொண்டு நின்றுவிட்டு, மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக பத்திரிகையில் செய்தியைப் போட்டுவிட்டால் அரசியல் வேலை முடிந்தது என்ற சொகுசான வாக்குவேட்டைக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள். மக்களுக்கும் இதுதான் அரசியல் என்று பழக்கப்படுத்தி விட்டிருக்கிறார்கள்.

மக்களின் கஷ்டங்களை மாற்றுவதற்கு எந்தத் துரும்பையும் எடுத்துப் போடாமலே, அந்த மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று அரைநூற்றாண்டுக்கும் மேலாக மக்களின் தலைவர்களாய் வலம் வந்துகொண்டிருக்கும் இவர்களுக்கு மூளை இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. இதயத்தைத்தான் எங்கோ தொலைத்துவிட்டார்கள். - ஆசிரியர்

# லக்ஷ்மன் கதிர்காமரின் மகஜர் காணிச்சுவீகரிப்பிற்கு எதிராக விளக்கமளிக்குமாறு உத்தரவு

காணி சுவீகரிப்புக்கு எதிராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மகன் தாக்கல் செய்த மனு தொடர்பில் விளக்கமளிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த ரீட் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகளை விளக்கமளிக்குமாறு கோரி கட்டளை அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலி. வடக்கு கீரிமலைப் பகுதியில் உள்ள தமது குடும்பச் சொத்தான காணி சுவீகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மகன் மேன் முறையீட்டு நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை மனுத் தாக்கல் செய்தார். 1968 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட நீதிமன்றின் ஊடாக இக்காணி பிரிக்கப்பட்டு லக்ஷ்மன் கதிர்காமருக்கு உடமையாக்கப் பட்டிருந்தது.

லக்ஷ்மன் கதிர்காமர் இறந்துவிட்ட நிலையில் தேச வழமைச் சட்டத்தின் அடிப்படையில் இக்காணி அவரது மகனான சிறிரா கணவனுக்கு உரித்துடையதாகியுள்ளது.

காணி சுவீகரிப்பு சட்ட மூலத்தினூடாக இந்தக் காணியில் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வதைத் தடுப்பதற்கான இடைக்கால நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறும் தனது மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தனது காணிக்கு இறுதியாக இராணுவ அனுமதியுடன் கடந்த 2011 ஆம் ஆண்டு தான் சென்றதாகவும் காணிக்கு அருகில் பெருமெடுப்பில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதைக் கண்டுதான் அதிர்ச்சியடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். உயர் பாதுகாப்பு வலய எல்லையை பின்நகர்த்துவதன் ஊடாக தனது காணியை தான் முழுமையாகப் பயன்படுத்த முடியும் எனவும் தனது மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசவழமைச் சட்டத்தின் படி எனக்கு உரித்துடைய எனது முன்னோர்களின் காணியை எனது அனுமதியின்றி சுவீகரிப்பதானது எதேச்சாதிகாரமானது. அநீதியானது எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பங்குச் சந்தை வியாபாரம் சூடு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வம்

கடந்த வார இறுதிப்பகுதியில் உள்நாட்டு சிறு முதலீட்டாளர்களின் அதிகளவு சந்தை ஈடுபாட்டின் காரணமாக பங்குச்சந்தையின் பிரதான சுட்டிகள் உயர்வடைந்த நிலையில் பதிவாகியிருந்தன. ஆனாலும் கடந்த வெள்ளிக்கிழமை, வியாழக்கிழமையுடன் ஒப்பிடுகையில் பிரதான சுட்டெண் 0.78 புள்ளிகள் சரிவடைந்து எதிர்பெறுமதியில் நிறைவடைந்திருந்ததுடன், S&P சிறிலங்கா 20 சுட்டி 13 புள்ளிகள் அதிகரித்து நிறைவடைந்திருந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவு பங்கு விற்பனையில் கடந்த வாரம் ஆர்வம் செலுத்தியதை அவதானிக்க முடிந்ததுடன், சிலோன் டுபாக்கோ, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், வட்டவளை பிளான்டேஷன், கொமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி, சன்சைன் ஹோல்டிங்ஸ், எயிட்கன் ஸ்பென்ஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகளின் கடந்தவாரம் பெருமளவு ஆதிக்கம் செலுத்தியிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,155.82 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 3490.57 ஆகவும் அமைந்திருந்தன.

யூலை 29 ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 4,005,800,509 அமைந்திருந்தது. கடந்தவாரம் மொத்தமாக 18,125 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 16,917 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 1,208 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் சிலோன் டொபாக்கோ, குட் ஹோப், செரன்டிப் லான்ட், சிட்ரஸ் ஹிக்கடுவ மற்றும் ஹியூஜே போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் பொதுநலவாய நாடுகள் அதீத அக்கறை

வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்தும் அதன் நடைமுறைகள் மற்றும் தேர்தல் சட்ட விதிகள் குறித்தும் பொதுநலவாய நாடுகள் இப்போது அதிக அக்கறை செலுத்த ஆரம்பித்துள்ளன.

இதன் முதற்கட்டமாக வடக்கு மாகாண சபைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து கொமன் வெல்த் நாடுகளின் பிரதிநிதிகள் நேற்றைய தினம் யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

நேற்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த அவர்கள் யாழ். தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளர் அர்ச்சுதனைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெறவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து அவர்கள் கொமன்வெல்த் பிரதிநிதிகளுக்கு விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு மாகாணசபைத் தேர்தலில் கொமன்வெல்த் நாடுகளின் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாகவே இவர்களது விஜயம் அமைந்திருப்பதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

# வாஸ் குணவர்தன மீது மற்றுமொரு வழக்கு

## மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு

இலங்கை தொழில்நுட்ப அறிவியல் கல்லூரி மாணவரான நிபுண தனுஷ்கராம நாயக்கவை கடத்திச் சென்று கடுமையாக தாக்கிய சம்பவத்தில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடருமாறு சட்டமா அதிபருக்கு ரீட் உத்தரவை பிறப்பிக்க வேண்டும் எனக் கோரி ராமநாயக்கவும் அவரது தாயாரும் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் எஸ்.சிறிஸ்கந்தராஜா மற்றும் நீதியரசர் மாலனி குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கு முன்னர், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன, சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர், அத்துருகிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவிப்பாணை அனுப்புமாறு உத்தரவிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# சகடமுனியின் விகடசங்கடம்





**சம்பந்தர் மகிந்த ராஜபக்ஷவைக் கடைசியாகத் தனியாகச் சந்தித்து மூன்று நாட்களிலேயே சம்பந்தர் இந்தத் திடீர் முடிவைத் தமிழரசுக் கட்சிக்காரர்கள் மீது திணித்தார். திரு விக்கினேஸ்வரன், தமிழ் நாட்டுத் தலைவர்கள் தங்களுக்கு உதவ வேண்டுமே தவிர அவர்கள் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தி இலங்கைத் தமிழர்கள் மீது எந்தவொரு அரசியற் தீர்வையும் திணிக்கக்கூடாது என கோத்தாபய மாதிரி எச்சரிக்கையும் விடுத்துள்ளார். திரு. விக்கினேஸ்வரனின் இரண்டு பிள்ளைகளும் தூய தேசியத்துக்கே ஒவ்வாத வகையில் சிங்களவர்களையே மணம் முடித்திருக்கிறார்கள். மேலும் திரு விக்கினேஸ்வரன் ஜனாதிபதி மகிந்தவின் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான அமைச்சர் வாசுதேவா நாணயக்காராவின் நெருங்கிய உறவினர். குருவே இதுகளைத் தொகுத்துப் பார்க்க தங்களது சங்கடத்துக்கு ஏதாவது விடைமருந்து புலப்படுகிறதா!**

**சகடமுனி:-** ஓ! குமாஸ்த்தா இங்க வா!

**குமாஸ்த்தாமுனி:-** வந்தேன் குருவே! உத்தரவு என்னவோ!

**சகடமுனி:-** நீ ஒன்றும் வெட்டிக் கிழிக்க வேண்டாம். எனது மண்டை ஒரு சங்கடத்தில் கிறங்கிப் போய்க் கிடக்கிறது. அதற்கு விடை காண எனக்கு உதவு அதுவே போதும்.

**குமாஸ்த்தாமுனி:-**
இதென்ன சோதனை குருவே; எல்லாம் தெரிந்த தங்களின் சங்கடத்தைத் தீர்க்க இந்த சொன்னதைச்செய்யும் சுப்பனுக்கு என்ன குருவே தெரியும்!

**சகடமுனி:-** அடே குமாஸ்த்தா! நீதான் விடிஞ்சா பொழுதுபட்டா பேப்பர் படிக்கிற கடைத்தெருக்கள் மாக்கெற்றுகள் தேத்தண்ணிக் கடைகள் கோயிலடிக் கூட்டங்கள் குழாயடி என்று சுத்தித்திரிகிற ஆள். குசுகுசுக்கள் முணுமுணுப்புக்கள், வதந்திகள், புரளிகள் என ரோட்டில போற காற்றில் மிதக்கிற சந்தியில கிடக்கிற சந்தையில நாறுகிற பலதும் பத்தும் உனக்குத்தான் கனக்கத் தெரியும். முதலில் விஷயத்தைக் கேள்: பிறகு உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.

**குமாஸ்த்தாமுனி:-** உத்தரவு! கூறுங்கள் குருவே!

**சகடமுனி:-** அட சேமணை குமாஸ்த்தா! ஏன்! முன்னாள் நீதவான் விக்கினேஸ்வரன் திடீரென வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக்கப் பட்டார்?

அதுக்கு அவர் எப்படி ஒத்துக் கொண்டார்?

எப்படி இது நடந்தது?

என்ன காரணங்களுக்காக இது நடந்தது?

யாரின் வேண்டுதலின் பேரில் இது நடந்தது?

இந்த விடயத்துக்காக சம்பந்தர் யாரால் மடக்கப்பட்டார்?

சேனாதிராஜா இதற்காக எப்படி விட்டுக்கொடுக்க வைக்கப்பட்டார்?

இந்த முதலமைச்சர் பதவி கனவுகளோடு கடந்த இரண்டு வருடங்களாக வாழ்ந்த பல பிரமுகர்கள் எப்படி தமது ஆசைகளை அடக்கி ஒடுக்கி ஒரே நாளிலேயே சுருண்டு போனார்கள்?

இதுகள்தானப்பா என்ர மண்டையைக் குடைஞ்சு சங்கடப் படுத்திக் கொண்டிருக்குதுகள்.

சுமந்திரனும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் இதற்கான முன்கட்ட தயாரிப்பு வேலைகளையெல்லாம் நகர்த்தியிருக்கிறார்கள் என்பது

முனிதாசபூதன்

தெரிகிறது. அதெல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய பதவி பணக்கு விப்பு அரசியற் காலகட்டத்தில் எந்த அளவுக்கு பப்பாவில் ஏத்தல்கள், கழுத்தறுப்புகள், முதுகில் குத்தல்கள் என பலதும் உள்ளன என்பதை திரு விக்கினேஸ் வரன் தெரிந்தேதான் இருப்பார். அதிலும் முக்கியமாக தன்னை ஏத்திவிடும் யாழ்ப்பாண - கொழும்பு தமிழ்ப் பிரமுகர்கள் நண்டுகள் மாதிரி முன்னால ஏறவிட்டு பின்னால காலில் பிடித்து இழுத்து விழுத்துபவர்கள் என்பதையும் இந்தப் பிரமுகர்களும் அறிவுப்பிழைப்பாளிகளும்தான் பிரபாகரனை உசுப்பேத் தியே முள்ளி வாய்க்காலில் உடல் ரணகளமாக மண்டை பிளந்து கிடக்க விட்டு மறந்து போனவர்கள் என்பதையும் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கக் கூடிய அளவுக்கு திரு விக்கினேஸ்வரன் தகவலறிவும் சிந்தனையறிவும் உடையவர்.

திரு விக்கினேஸ்வரன் தமது எழுபது கால வாழ்விலும் முப்பது வருடகால சட்டத்துறை நீதித்துறை அனுபவங்களினூடாகவும் கற்றுக்கொண்டிருக்கக் கூடியது எப்படி நோகாமல் நொங்கு தின்பது என்பதைத்தான்.

எந்த நோவுமில்லாமல் முதலமைச்சர் பதவி கிடைத்தாலும் பிறகு அது பல்லுடைக்கிறதாக தாடை எலும்பு முறிக்கிறதாக மட்டுமல்ல மூளை நரம்பு தெறிக்கிறதாகத்தான் இருக்கும் என்பதைத் தெரியாமலா இந்தக் களத்தில் இறங்கியிருக்கிறார். நிச்சயமாக அவர் தெரியாமல் இறங்கியிருக்கிறார் என்று கூற முடியாது.

ஒரு பதவியில் தொடர்ந்து இருப்பதானால் எவ்வளவு நெளிய வேணும் எப்படியெல்லாம் சுழிக்க வேணும் என்னவாறெல்லாம் வழிய வேணும் என்பதிலெல்லாம் அவர் நீதவான் பதவிக் காலத்தில் அத்துபடியாகவே கற்று வைத்திருப்பார்.

ஆனாலும் இந்த முதலமைச்சர் பதவிக் கதிரையில் உட்கார்ந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒவ்வொரு கட்சிக்காரரும் கழுகுகள் மாதிரிக் காலில பிடித்து இழுப்பார்கள்.

வெளிநாட்டுப் புலிப்பிரமுகர்கள் கூட்டம் அரசாங்கத்தை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தும் வகையிலேயே இவர் செயற்பட வேணுமென நெருக்கடி கொடுக்கும்.

13ஆவது திருத்தத்தில் அதிகாரங்கள் தொடர்பாக சுமந்திரன் இவர் பெயரில் வழக்குகள் போட்டு தனது தொழிலுக்கும் தொடர்புகளுக்கும் தேவையான புகழை மேலும் பெருக்கிக்கொள்ள காவலிருக்கிறார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் மாகாணசபையைக் கொண்டு புலி ஆதரவுத் தீர்மானங்களை அடுத்தடுத்து நிறைவேற்றி வெளிநாட்டுப் புலிகளிடமிருந்து பெட்டிபெட்டியாக எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

திரு விக்கினேஸ்வரன் நியாயமான காரணங்களுக்காக அரசைப் பாராட்டினாலோ அரச அமைச்சர்கள் பங்கேற்கும் விழாக்களில் நிகழ்ச்சிகளில் பங்கேற்றாலோ அவர் தமிழினத் துரோகிப் பட்டத்துக்கு உள்ளாக அதிக நேரமெடுக்காது.

அதேவேளை அவர் அரசாங்கத்தோடு தமிழ்த்தேசிய சண்டித்தன கொழுவல் அரசியலில் காலத்தைப் போக்குவாரானால் தமிழ் அரசியலில் புகழ் தேடிக் கொள்ளலாம் ஆனால் அவரது மாகாண அரசாங்கத்தால் மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்ய முடியாது. தமிழ் இனவாத அரசியலில் மூழ்கடிக்கப்பட்டு விடுவார். ஆனால் அவர் தனது சொந்த வீட்டில் நிம்மதியாக தூங்க முடியாது. தனிப்பட்ட உறவுகள் முன்னால் தலையைத் தொங்கப் போட்டுத்தான் நடக்க வேண்டும்.

இப்படி திரு விக்கினேஸ்வரன் அனைத்துத் திசைகளிலிருந்தும் ஒன்றுக்கு ஒன்று பொருந்தாத நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

கடைசியில் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற கட்டத்தைத்தான் அவர் சந்திக்க வேண்டியிருக்கும்.

த.தே.கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், அதிகாரங்களும் இல்லாத அரசாங்க ஒத்துழைப்பும் கிடைக்க முடியாத ஒன்று என்பது மட்டுமல்ல. அரசாங்கம் தரும் நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டிய முதலமைச்சர் பதவியே இது. யாதொன்றும் அறியேன் பராபரமே என்று இவர் கதறினாலும் எல்லாப்பழியும் இவருக்கே என்பதே இந்த முதலமைச்சர் பதவி. அத்துடன் சுற்றி சேர்ந்துள்ளவர்களோ குரங்கு அப்பம் பிரிப்பது போல தன்னைப்பிரித்து மேய்ந்து விடுவார்கள் என்பதையெல்லாம் தெரிந்திருக்கக் கூடிய புரிந்து கொள்ளக் கூடிய ஒருவர் எப்படி இப்படிப்பட்ட இந்த முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டார் என்றுதான் என்னால் புரியமுடியாத சங்கடமாக உள்ளது.

குமாஸ்த்தாமுனி:- குருவே! எனக்கும் ஒரே குழப்பமாகத்தான் இருக்கு. ஆனால் நான் சேர்த்த சில செய்திகளை நீங்கள் கேட்டால் சிலவேளை இந்தச் சங்கடத்துக்கு விடையைக் கண்டு பிடித்து விடுவீர்கள்.

**சகடமுனி:-** அதென்ன செய்திகள்?

**குமாஸ்த்தாமுனி:-** குருவே! இந்தியா சொல்லித்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை முதலமைச்சர் ஆக்கியது என்றில்லை என்று கூறியிருக்கிறார். இதைப்பார்த்தால் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற மாதிரியில்லையா? சம்பந்தர் மகிந்த ராஜபக்ஷவைக் கடைசியாகத் தனியாகச் சந்தித்து மூன்று நாட்களிலேயே சம்பந்தர் இந்தத் திடீர் முடிவைத் தமிழரசுக் கட்சிக்காரர்கள் மீது திணித்தார். திரு விக்கினேஸ்வரன், தமிழ் நாட்டுத் தலைவர்கள் தங்களுக்கு உதவ வேண்டுமே தவிர அவர்கள் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தி இலங்கைத் தமிழர்கள் மீது எந்தவொரு அரசியற் தீர்வையும் திணிக்கக்கூடாது என கோத்தாபய மாதிரி எச்சரிக்கையும் விடுத்துள்ளார்ளூ திரு. விக்கினேஸ்வரனின் இரண்டு பிள்ளைகளும் தூய தேசியத்துக்கே ஒவ்வாத வகையில் சிங்களவர்களையே மணம் முடித்திருக்கிறார்கள். மேலும் திரு விக்கினேஸ்வரன் ஜனாதிபதி மகிந்தவின் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான அமைச்சர் வாசுதேவா நாணயக்காராவின் நெருங்கிய உறவினர். குருவே இதுகளைத் தொகுத்துப் பார்க்க தங்களது சங்கடத்துக்கு ஏதாவது விடைமருந்து புலப்படுகிறதா!

**சகடமுனி:-** சபாஷ் குமாஸ்த்தா! புதினங்கள் தேடும் உனது குணத்துக்கு எனது பாராட்டுக்கள்! நீ சொல்லுபவற்றைப் பார்க்கையில் இந்தியாவுக்கு இதில் ஏதும் பங்கில்லை என்று தெரிகிறது. ஆனால் நிச்சயமாக மகிந்தவுக்குப் பங்கிருக்கிறது என்றே புரிய வேண்டியிருக்கிறது. அதனால்தான் சேனாதிராஜா, சுரேஷ் மற்றும் செல்வம் அடைக்கலநாதன், சரவணபவன் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் பெட்டிப்பாம்பாக அடங்கிப் போய்விட்டார்கள் என்பது புரிகிறது. அப்ப திரு விக்கினேஸ்வரன் முதலமைச்சர் கதிரையில உட்கார முதலிலேயே டபுள் விளையாட்டில இறங்கி விட்டாரா! அப்படியே வைத்துக் கொண்டாலும் குமாஸ்த்தா! திரு விக்கினேஸ்வரன் எத்தனை மாதங்களுக்குத்தான் மகிந்தவுக்கு நல்ல தம்பியாக இருப்பார்? அப்படியிருந்தாரென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரரின் தமிழின மாவீர அரசியல் அவரை சும்மா விட்டுவிடுமா? என்று புதிய சங்கடங்கள் என் தலையைச் சுற்றுகின்றன.

# இன, மத, குல பேதங்களை கைவிட்டு அனைவரும் ஒன்றாக வாழவேண்டும்

## வவுனியாவில் ஜனாதிபதி



(வவுனியா)

அபிவிருத்தியின் மூலம் நிலையான சமா தானத்தை அடைய முடி யும். இன, மத, குல பேதங்களைக் கைவிட்டு அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும் பிரிவினை வாதத்திற்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்

இலங்கையின் வட பகுதியில் போருக் குப் பின் ஆரம்பிக்கப்பட்டுள்ள வெளிநாட் டுத் தொழிற்சாலை ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வவுனியாவில் திறந்து வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியாவில் 150 மில்லியன் டொலர் செலவில் இந்த ஆடைத்தொழிற்சாலை இத்தாலி நாட்டு நிறுவனம் ஒன்றின் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.


வவுனியா நகரில் இருந்து சுமார் 8 கிலோ மீற்றர் தொலைவில் நிறுவப்பட் டுள்ள இந்தத் தொழிற்சாலையில் ஆரம்பத்தில் 250 யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிட்டியிருக்கின்றது.

நாளடைவில் இங்கு மூவாயிரம் பேர் வரையிலான இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நம் பிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யுத்தம் முடிவடைந் ததன் பின்னர் வட பிரதேசத்தை அபி விருத்தி செய்வதில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்திச் செயற்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே பல மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டிக்கிறது. அபி விருத்திப் பணிகளுக்கென மேலும் நிதி செலவிடப்படவுள்ளதாகவும் தெரி வித்துள்ளார். இந்த வைபவத்தில் இலங் கைக்கான இத்தாலிய நாட்டு தூதுவர், அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரிசாட் பதியுதீன் மற்றும் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, திஸ்ஸ கரலியத்த மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கொழும்புத் துறைமுகத்தில் புதிய இறங்குதுறை திறப்பு



(கொழும்பு)

சர்வதேச மட்டத்தில் மிக வேலைப்பளுவான கப்பல் மார்க்கத்தில் அமைந்துள்ள கொழும்பு துறைமுகத்தின் புதிய சர்வதேச இறங்குதுறை நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சிங்கப்பூர் மற்றும் டுபாய் நாடுகளுக்கான நேரடி கப்பல் மார்க்கத்தின் கேந்திரமாக அமைந்துள்ள கொழும்புத் துறைமுகத்தின் புதிய இறங்குதுறை மற்றும் களஞ்சியசாலை ஆகியன 500 மில்லியன் டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

.புதிய இறங்குதுறை திறக்கப்பட்டதன் பின்னர் 18 ஆயிரம் கொள்கலன்களை பறிமாற்ற முடியும் என்றும், உலகின் மிகப் பெரிய கப்பல்களுக்கும் கொழும்பு துறைமுகங்களுக்கு வந்து செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறங்குதுறையின் பிரதான நீர்ஊடுருவும் பகுதியின் நீளம் 6.8 கிலோமீற்றர்கள் என்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.இதனிடையே, புதிய இறங்குதுறையை எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வையிட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது

இலங்கையின் உள்விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது என மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியான் கோவை சந்தித்த போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார். சீனா எந்தச் சந்தர்ப்பத்திலும் சிறிய நாடுகளை அபிவிருத்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கவே முனைப்பு காட்டி வருவதாகத் தெரி வித்துள்ளார்.

தெற்காசிய பிராந்திய வலய நாடுகளுடன் சீனா பேணி வரும் நட்புறவு வரவேற்கத் தக்கது. சீன மீன்பிடித் தொழில்நுட்பங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படும். எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 100 தைரியசாலிகளினால் நாட்டை மாற்ற முடியும்

பத்தாயிரம் கோழைகளை விடவும் நூறு தைரியசாலிகளினால் நாட்டை மாற்றியமைக்க முடியும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசியலில் ஈடுபடும் பலர் பாலியல் வல்லுறவு கொலை, கொள்ளை போன்ற குற்றச்செயல் களுடன் தொடர்புடையவர்களாவார். பழைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டால் மக்களுக்கு சேவையாற்ற முடியாது.மக்களுக்கு சேவையாற்றுவதனை விடவும் இவர்கள் தங்களது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டினர். பல வீடுகளில் மூன்று வேளை சாப்பிடு வதில்லை, மிகவும் சிரமப்பட்டு இரண்டு வேளை உணவு உட்கொள்கின்றனர்.கோழைகளே சட்டத்தை கையில் எடுத்து மக்களை அச்சுறுத்துவார்கள்.நாம் சட்டத்தை மதிக்கின்றோம் எந்த சந்தர்ப்பத்திலும் குற்றச் செயல்களுக்கு இடமளிக்க மாட்டோம் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

# வெலிவேரிய முறுகல் சம்பவத்திற்கு இராணுவத்தினரை குற்றம் சுமத்த முடியாது

(கொழும்பு)

கிராம மக்கள் அமைதியான முறையில் நடந்து கொண்டிருந்தால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்காது. படையினரை மக்கள் ஆத்திர மூட்டியதாகவும் ஒட்டுமொத்த சம்பவத்திற்கும் இராணுவத்தினரை குற்றம் சுமத்த முடியாது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரி வித்துள்ளார். வெலிவேரியாவில் இடம்பெற்ற போராட்டத்தை அவதானித்து, படையினரை அனுப்பி வைக்குமாறு தாம் கோரிக்கை விடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிராம மக்களின் கோரிக்கை நியாயமானது என்ற போதிலும் போராட்டத்தில் குழப்பம் ஏற் படக் கூடுமென்ற அச்சம் காரணமாகவே இவ் வாறு படையினரை அனுப்பி வைக்குமாறு தாம் கோரிக்கை விடுத்தோம். குறிப்பிட்ட சிலர் கிராம மக்களை பிழையாக வழிநடத்தியதனை தாம் அவதானித்தோம்.

ஆர்ப்பாட்டத்தை எவ்வாறு நடத்த வேண் டும் என்பது பற்றிய சரியான வழிகாட்டல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. குழப் பங்கள் ஏற்படக் கூடும் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்பு அமைச்சைத் தொடர்பு கொண்டு படையினரை சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரினோம்.

# புறக்கணிப்பு

பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சிக்கு தமிழ் மக்கள் தொடர்ந்து ஆதரவளிப்பதில் பிர யோசனம் இல்லை என்று பிரித் தானிய புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படும் செயற்பாட்டாளர் சாரா எல்ட்ரிஜ் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தேர்தல்களின் போதும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் கன்சர்வேடிவ் கட்சிக்கு அதிகரித்த நிதியையும் ஆதர வையும் வழங்கியுள்ளனர்.

ஆனால் அங்குள்ள தமிழ் மக்களுக்கு கன்சர்வேடிவ் கட்சி யினால் எந்த விதமான நலன் களும் செய்யப்படவில்லை.

குறிப்பாக இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை பிரித் தானியா புறக்கணிக்க வேண்டும் என்று தமிழ் அமைப்புகள் கோரி இருந்தன.

எனினும் இந்த கோரிக் கையை பிரித்தானியா ஏற்று நடக்கவில்லை.

இவ்வாறான செயற்பாடு களால் கன்சவேடிவ் கட்சியை பிரித்தானியாவில் உள்ள தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று சாரா எல்ட்ரிஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பிரமாண்ட அனுகூலங்கள் வழங்கும் செலான் வங்கியின் கடன் அட்டை




(கொழும்பு)

செலான் வங்கியின் கடன் அட்டை வாடிக்கையாளர்கள் அனைவரும் ஒரு தொடரிலான பிரமாண்டமான அனுகூலங்கள் வழங்கி உபசரிக்கப்படவுள்ளனர். என செலான் வங்கியின் அட்டை கள் பிரிவு பிரதம முகாமை யாளரான நிமேஷ் பெர் ணான்டோ தெரிவித்துள்ளார்.

அதாவது சுப்பர் மார்க்கட் பொருட்கொள்வனவு முதல் - எரிபொருள் நிரப்புதல், ஆடைக் கொள்வனவு, உணவருந்துதல், ஹோட்டலில் தங்குதல், வெளி நாட்டுப்பயணம், சுகாதார சேவை வரையான இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் உள்ளடக்கியதான பல்வகைப் பட்ட வெகுமதிகள் வழங்கப்பட வுள்ளன.

2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் திகதி வரைக்கும் நடை முறைப்படுத்தப்படும் இந்த ஊக்கு விப்புத் திட்டத்தின் கீழ் செலான் வங்கியின் கடனட்டை வைத் திருக்கும் வாடிக்கையாளர்கள் நாடெங்கிலும் உள்ள உயர்தர மான ஹோட்டல்கள் மற்றும் தங்குவிடுதிகளில் தங்கியிருக் கும் வேளையில் 60 சதவீதம் வரையான கழிவினைப் பெற் றுக் கொள்ளலாம்.

செலான் வங்கியின் கடன் அட்டை வாடிக்கையாளர்கள் கார்கில்ஸ், கீல்ஸ், ஆர்பிகோ, லா'.ப்ஸ் மற்றும் ஏனைய சுப்பர் மார்க்கட் விற்பனை நிலையங் களில் வார இறுதி நாட்களில் மு.ப. 8.00 மணிமுதல் பி.ப. 8.00 மணி வரை பொருட்கொள் வனவை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அலாதியான புது அனுபவம் கிடைக்கின்றது. இவ் விற்பனை நிலையங்களில் நீங்கள் ரூபா 3,500 இற்கு அதிகமான தொகையை கடனட்டையைப் பயன்படுத்தி செலவு செய்யும் போது 10% தள்ளுபடியை (அதிகபட்ச கழிவு ரூபா 1,000) கொண்டு வருகின்றது. அதே போல், வரவு அட்டைகளின் மூலம் கொள்வனவை மேற் கொண்டால் 5 சதவீத (உயர்ந்த பட்ச கழிவு ரூபா 300) தள்ளு படி கிடைக்கின்றது.

இதேவேளை, புதன்கிழமை களில் எரிபொருள் நிரப்பும் போதும் அனுகூலங்கள் விஸ் தரிக்கப்பட்டு இருக்கின்றன. அதன்படி நாடெங்கிலும் உள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் கடனட்டை மூலம் ரூபா 1,000 செலவு செய்து எரிபொருள் நிரப்பும் போது ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா 10 (உயர்ந்தபட்ச கழிவு ரூபா1,000) தள்ளுபடியும், வரவு அட்டையைப் பயன்படுத்தி நிரப் பினால் ரூபா 5 (உயர்ந்தபட்சம் ரூபா 300) தள்ளுபடியும் வாடிக் கையாளர்களுக்கு கிடைக் கின்றது.

இந்த மாபெரும் வெகுமதி வழங்கலானது அடிப்படையில் எமது ஒட்டுமொத்த கடனட்டை வாடிக்கையாளர் தளத்தையும் மையமாகக் கொண்டதாகும். அவர்களுக்கும், அதேபோல் புதிதாக கடனட்டைக்காக விண் ணப்பிக்கும் நபர்களுக்கும் வெகுமதிகளை வழங்குவதை யிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின் றோம். இதன்பொருட்டு, எந்த வொரு நபரும் செய்ய வேண் டியதெல்லாம் நாடு முழுவதும் காணப்படுகின்ற எமது செலான் வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்குச் சென்று, முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பப் படிவத்துடன் அவசியமான ஆவணங்களையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் 24 மணித்தியாலங் களுக்குள் செலான் கடனட்டை யைப் பெறலாம். அதேநேரம், அழைப்பு நிலையத்திற்கு தொலைபேசி அழைப்பை மேற் கொண்டு இது தொடர்பான மேல திக விபரங்களையும் அறிந்து கொள்ள முடியும் என்றார்.

# மக்களின் சரியான அரசியல் தெரிவே பிரதேச மேம்பாட்டை உறுதிப்படுத்தும்



மக்களின் சரியான அரசியல் முடிவுகளும் தெரிவுகளுமே தொடரும் அபிவிருத்திச் செயற்பாடுகளை தளர்வின்றி முன்னெடுக்க வழிவகுக்கும் என ஈ.பி.டி.பியாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை உதயநகர் கிழக்குப் பகுதியில் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் பிரதேச அபிவிருத்தியிலும் மக்களின் வாழ்வியலிலும் குறிப்பிடத்தக்க மேம்பாடு எட்டப்பட்டுள்ளது. இருப்பினும் மக்களின் தேவைகள் அனைத்தும் முழுமையாக நிறைவுசெய்யப்படவில்லை. ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் இளம் தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புக்களையும் தொழில்சார் பயிற்சிகளையும் வழங்கியுள்ளபோதும் மேலும் பல ஆயிரக்கணக்கான உழைக்கும் வர்க்கத்தினர் வேலைவாய்புக்களை எதிர்பார்த்துக்காத்திருக்கின்றர். எனவே அபிவிருத்திச்செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படவேண்டும். இளம் தலைமுறையினருக்கு தொடர்ந்தும் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்

மக்களின் தொழில்துறைகளும் வருமான மார்க்கங்களும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எனவே மக்களின் சரியான அரசியல் முடிவுகளும் அதுசார்ந்த தெரிவுகளுமே இச்செயற்பாடுகளை தளர்வின்றி முன்னெடுக்க வழிவகுக்கும் என்றார்.

இக்கலந்துரையாடலில் உதய நகர் கிழக்கு மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு அமைவாக பிரதேசத்தின் வீதி அபிவிருத்தி தொடர்பாகவும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு வாய்க்காலினை மீளமைப்பது தொடர்பாகவும் குறித்த இடங்களுக்கு மக்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இக்கலந்துரையாடலில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் கிருஸ் ணசாமி ஈ.பி.டி.பி கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், மற்றும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என்பலரும் கலந்துகொண்டனர்.

# பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு

(கிளிநொச்சி)

யாழ். இந்துக் கல்லூரியில் 1988 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி பாடசாலையை விட்டு வெளியேறிய பழைய மாணவர்களின் வெள்ளி விழா ஒன்று கூடல் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை இரவு பேருந்தில் கொழும்பு செல்லும் பழைய மாணவர்களும் அவர்களது மனைவி, பிள்ளைகளும் கொழும்பில் இரு தினங்கள் தங்கி வெளிநாடுகளிலிருந்து வரும் பழைய மாணவர் குடும்பங்களுடன் கொழும்பிலுள்ள பழைய மாணவர் குடும்பங்களுடன் இணைந்து ஒன்று கூடலில் ஈடுபடுவார்கள்.

9ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை அடைவார்கள். எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரியில் ஒன்று கூடல் சிரமதான நிகழ்வுகளில் கலந்து கொள்வார்கள்.

1988 ஆம் ஆண்டில் கற்று வெளியேறிய மாணவர்கள் இதில் கலந்து கொள்ள பலர் ஏற்கனவே பதிவை மேற்கொண்டுள்ளார்கள். புதிதாகப் பதிவை மேற்கொள்ள விரும்புவோர் . சீ.சிறிரங்கனுடன் 0773040162 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (90)

# வீதி புனரமைப்பு

கரவெட்டியிலுள்ள அரசடி சோனப்பு வீதியானது நெடுங்காலமாகத் பொது மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் புனரமைப்பின்றிக் காணப்பட்டது.

எனினும் இது பற்றிக் கடந்த மாதம் தினமுரசு பத்திரிகையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததை அடுத்து கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தொடக்கம் இந்த வீதியானது கற்கள் பரவப்பட்டு புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.இதனால் பாடசாலை மாணவர்களும், பாதசாரிகளும் வாகன சாரதிகளும் பயணம் மேற்கொள்வதில் இருந்த சிக்கல் நிலை நீங்கவுள்ளதாக மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.


அத்துடன் இவ்வீதிப் பகுதியில் உரிய இடங்களில் வீதிக்கடவைக் குறியீடுகளையும் பதித்தால் தாம் நன்மையடைவதுடன் விபத்துக்களும் ஓரளவு தடுக்கப்படும் எனவும் இந்த வீதியால் பயணம் செய்வோரால் தெரிவிக்கப்படுகிறது. (85)

# கூட்டுறவுக் கடையில் திருட்டு பொலிகண்டியில் சம்பவம்

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் "சங்க" பொலிகண்டி கிளைக்கடையில் கடந்த சனிக்கிழமை கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை அதிகாலை குறித்த கடையில் கையொப்பமிட பொலிஸார் சென்றவேளை கடைக்கதவு உடைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதில் கடையில் இருந்த அரிசி,மா,சீனி, ,தேயிலை, பால்மா வகைகள். எனப் பல உலர் உணவுப்பொருட்கள் மற்றும் சைக்கிள் ரயர்கள் என்பன திருடப்பட்டுள்ளதாக கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவற்றின் பெறுமதி ஏறக்குறைய 70ஆயிரம் ரூபா இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸால் மோப்பநாய் சகிதம் வந்து தேடுதல் மேற்கொண்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (116)



செஞ்சோலை மற்றும் பாரதி இல்லத்தைச் சேர்ந்த 180 இற்கும் மேற்பட்ட மாணவிகள் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலாவை மேற்கொண்டபோது.... (பா)

# ரம்ழான் நற்சிந்தனை



நோன்பு பெருநாள் இரவில் தீய செயல்களிலிருந்து விடுபட்டு நல் அமல்கள் புரிதல், ஸக்காத், தைக்கா, பித்ராஅரிசி, வழங்களுடன், பெருநாள் தினத்தில் அதிகாலை சிறிய உணவை உட்கொண்டு நோன்புப்பெருநாள் தொழுகைக்காக மைதானம் நோக்கி செல்லல் நபி(ஸல்)வழிமுறையாகும்.

# பிடியாணை பிறப்பு

நெல்லியடி பொலிஸ் நிலைய த்தில் பொய் முறைப்பாடு செய்த இரண்டு நபர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு நபர்களும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து நீதிமன் றத்துக்கு பொய்ச்சாட்சியம் அளித்த குற்றத்துக்காகவே இவர்களுக்கு எதிராக நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். இதனையடுத்தே இவர்களுக்கு நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் இவர்களை தேடிவருகின்றனர். (18)

# முரசின் இன்றைய பலன்



(06.08.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 21 ஆம் திகதி.ஆடி அமாவாசை விரதம்
பூசநட்சத்திரம் மு.ப 09.03 வரை
சித்தயோகம் இராகுகாலம 03.04- 04.34 வரை.
சுபநேரம 10.34- 12.04 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நுகர்வோர் அதிகரித்தல், உளவியல் பாதிப்பு, முதலீட்டு முயற்சிகளில் சரிவு நிலைப்பாடு,திட்டமிட்ட காரியங்கள் தாமதமாக முடிதல். |
| ரிஷபம் | சாட்சி சொல்ல முயன்றதால் அச்சுறுத்தல், எடுத்தெறிந்து பேசாமை நன்மை தரும்,அரசு தனியார் துறைக்கு வேலை கேட்டு விண்ணப்பம். |
| மிதுனம் | சொந்த மண்ணில் குடியேற அனுமதிக்குமாறு நீதி மன்றை நாடல், உத்தியோகத்துறையில் சக ஊழியரின் தொல்லை ஏற்படும். |
| கடகம் | புத்திசாலித்தனமான முடிவு எடுத்தல்,நண்பர்களால் மதிப்புப்பெறல்,புதியவர் நட்பால் உற்சாகமடைதல். |
| சிம்மம் | புதிய சிந்தனைகள் பிறக்கும்,உடையவன் பாரா விட்டால் ஒரு முழம் கட்டை என்பதை நினையுங்கள்,வீண்பழி சுமத்த முற்படுதல். |
| கன்னி | கோபத்தால் இழப்புக்கள் ஏற்படும் அபாயம், சகஊழியர்களின் விடயத்தில் தலையிடாமை நன்மையைக் கொண்டு வரும். |
| துலாம் | புதிய முயற்சிக்கு கால்கோள் எதிர்ப்புக்கள் மறையும்,சூழ்ச்சிகளை பொறுமை காத்து முறியடிப்பீர். |
| விருச்சிகம் | நிம்மதிப் பெருமூச்சு,பூர்வீகச் சொத்துப் பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு எட்டும்,எதிர்பாராத உதவி கிடைத்து பிரச்சினை தீர்க்கப்படல். |
| தனுசு | பிரசங்கத்தில் கலந்து கொள்ளல்,பயணம் தொடர்பாக மனைவி கணவரிடையே வாக்குக்கலகம், மிரட்டி காரியஞ்சாதித்தல். |
| மகரம் | சொற்பொழிவு கேட்டதால் மனஅமைதி ,தொழிலில் சூட்சுமங்களை அறிதல், விபத்தில் இருந்து மயிரிழையில் தப்புதல். |
| கும்பம் | நட்டத்தில் இயங்கிய நிலையத்தை மூடிவிடும் உத்தேசம், விருதுகள் பெற சிபார்சு,சூழல் சாதனை புரிய முயற்சித்தல். |
| மீனம் | சிறையினின்றும் விடுதலை, ஏற்றுக்கொண்டதினால் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி,காலாவதியான பொருட்களால் கேடு,பதவிக்கு விண்ணப்பித்தல். |

# ஐ.சி.சி. தரவரிசை ஜடேஜா முதலிடம்



(டுபாய்)

ஒருநாள் போட்டிகளுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் பந்துவீச்சு தரவரிசையில் இந்திய அணியின் சகலதுறை ரவீந்திர ஜடேஜா முதல் இடத்துக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் 17 ஆண்டுகளிற்குப் பின்னர் இந்திய அணியின் பந்து வீச்சாளர் ஒருவர் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஒரு நாள் போட்டிகளுக்கான புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபையினால் (ஐ.சி.சி.) நேற்று முன்தினம் வெளியிட்டது. பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் இந்தியாவின் ஜடேஜா 4 இடங்கள் முன்னேறி (733 புள்ளி) மேற்கிந்தியத்தீவுகளின் சுனில் நரைனுடன் முதல் இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.

ஐ.சி.சி. பந்து வீச்சாள்ர் தரவரிசையில் முதல் இடத்தை பிடிக்கும் 4ஆவது இந்திய வீரர் ஜடேஜா. முன்னதாக கபில்தேவ், மணீந்தர் சிங் மற்றும் அனில் கும்ப்ளே (டிச. 1996) ஆகியோர் முதல் இடத்தில் இருந்துள்ளனர். இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் 12 விக்கெட்டுக்களையும், மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்ற முத்தரப்பு தொடரில் 8 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய ஜடேஜா, சிம்பாப்வே தொடரில் 5 விக்கெட் மட்டுமே கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் போட்டிகளுக்கான சகலதுறை வீரருக்கான தரவரிசை பட்டியலிலும் ஜடேஜா 2ஆவது இடத்தில் (377 புள்ளி) உள்ளார். பங்களாதேஷ் ஷாகிப் அல் ஹசன் (387) முதல் இடத்தில் நீடிக்கிறார். அணிகளுக்கான தரவரிசையில் இந்தியா தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. துடுப்பாட்ட வீரருக்கான தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர்கள் அம்லா முதல் இடத்தில் உள்ளார்.

**அணிகள்**

| நிலை | அணி | புள்ளி |
|---|---|---|
| 01 | இந்தியா | 123 |
| 02 | அவுஸ்ரேலியா | 114 |
| 03 | இங்கிலாந்து | 112 |
| 04 | இலங்கை | 111 |
| 05 | தென்னாபிரிக்கா | 105 |
| 06 | பாகிஸ்தான் | 102 |
| 07 | நியூசிலாந்து | 089 |
| 07 | மேற்கிந்தியத்தீவு | 089 |
| 09 | பங்களாதேஷ் | 076 |
| 10 | சிம்பாப்வே | 052 |

**துடுப்பாட்டம்**

| நிலை | வீரர் | புள்ளி |
|---|---|---|
| 01 | அம்லா (தென்னாபிரிக்கா) | 853 |
| 02 | டிவில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) | 845 |
| 03 | சங்கக்கரா (இலங்கை) | 829 |
| 04 | ஹோலி (இந்தியா) | 819 |
| 05 | ட்ரொட் (இங்கிலாந்து) | 789 |
| 06 | டில்சான் (இலங்கை) | 746 |
| 07 | டோனி (இந்தியா) | 741 |
| 08 | மிஸ்பா (பாகிஸ்தான்) | 712 |
| 09 | குக் (இங்கிலாந்து) | 678 |
| 10 | டெய்லர் (நியூசிலாந்து) | 669 |

**பந்து வீச்சு**

| நிலை | வீரர் | புள்ளி |
|---|---|---|
| 01 | ஜடேஜா (இந்தியா) | 733 |
| 01 | சுனில் (மே.தீவுகள்) | 733 |
| 03 | ஸ்டீவன் பின் (இங்கிலாந்து) | 718 |
| 04 | ஆண்டர்சன் (இங்கிலாந்து) | 714 |
| 05 | அஜ்மல் (பாகிஸ்தான்) | 713 |
| 06 | ஹேரத் (இலங்கை) | 699 |
| 07 | மெக் (அவுஸ்ரேலியா) | 684 |
| 08 | ஹபீஸ் (பாகிஸ்தான்) | 678 |
| 09 | சோட்சோபி (தென்னாபிரிக்கா.) | 673 |
| 10 | ரசாக் (பங்களாதேஷ்) | 663 |

# பீற்றர்சனின் தியாகம்



(லண்டன்)

இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான ஒருவர் பீற்றர்சன் கடந்த மார்ச் மாதம் நியூசிலாந்து தொடரின் போது அவருக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதற்கு அவர் சத்திர சிகிச்சை செய்ய திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ்டெஸ்ட் தொடருக்காக பீற்றர்சன் தனது சத்திர சிகிச்சையைத் தவிர்த்துள்ளார். இதை அவரே தெரிவித்தார். ஆஷஸ் டெஸ்ட் முடிந்தபிறகு பீற்றர்சன் சத்திர சிகிச்சை செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியின் முதல் இனிங்ஸில் பீற்றர்சன் சதம் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பெரிய தொடருக்காக சத்திரி சிகிச்சையைத் தவிர்த்த பீற்றர்சனின் முடிவு வியப்பளிப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# சின்னத்திரையில் டைசன்

அமெரிக்காவின் முன்னாள் குத்துச் சண்டை ஜாம்பவான் மைக் டைசன் போட்டியில் ஆக்ரோஷமாக செயற்பட்டு, எதிராளியை நிலை குலைய செய்வது இவர் சிறப்பு. 1997இல் சக வீரர் இவான்டர் ஹோலிபீல்ட்டுக்கு எதிரான போட்டியில், அவரின் காதை கடித்து, சர்ச்சையில் சிக்கினார். தற்போது, சின்னத்திரையில் முகம் காட்டவுள்ளார். இவரின் வாழ்வில் அடைந்த ஏற்ற, இறக்கங்கள், திருமண வாழ்க்கை போன்றவற்றை பற்றி பகிர்ந்து கொண்டார்.

மைக் டைசன் கூறுகையில், போட்டியின்போது, ஆரம்பகம் முதலே, எதிராளியை தாக்குவேன். இதைப்போல, இந்த நிகழ்ச்சியிலும் துடிப்பாக செயற்படுவேன். என் நண்பர்கள், எனக்கு பழக்கப்பட்ட இயக்குநர்கள் பலர், இதை தொடர்ந்து பார்ப்பதாக சொல்கிறார்கள் என்றார்.

மைக் டைசன் குறித்து தொலைக்காட்சி இயக்குநர் ஸ்பைக் லீ கூறுகையில், பெரும்பாலான மனிதர்கள் தங்களின் மறைவான வாழ்வு பற்றி வெளியில் சொல்ல மாட்டார்கள். ஆனால், டைசன் தன் வாழ்வில் சந்தித்த அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறார். இந்த தைரியத்தை, இதற்கு முன் யாரிடமும் பார்த்ததில்லை என்றார்.

# இறுதியில் மட்ரிட்



(லாஸ்ஏஞ்சல்ஸ்)

எவர்டன் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் கோப்பைதொடரின் லீக் போட்டியில் வெற்றி பெற்ற ரியல் மட்ரிட் அணி, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அமெரிக்காவில் சம்பியன்ஸ்கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் இரண்டாவது சுற்று லீக் போட்டியில் ரியல் மட்ரிட், எவர்டன் அணிகள் மோதின. போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ரியல் மட்ரிட் அணிக்கு, நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (17ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். தொடர்ந்து ஓசில் (31ஆவது நிமிடம்) மற்றொரு கோல் அடிக்க, முதல் பாதியில் ரியல் மட்ரிட் 2-0 என முன்னிலை பெற்றது. எவர்டன் அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் பலிக்கவில்லை.


பின் இரண்டாவது பாதியில், போராடிய எவர்டன் அணிக்கு ஜெல்விக் (61ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மட்ரிட் அணி வீரர்களால் கடைசிவரை பதிலடி கொடுக்க முடியவில்லை. நிறைவில் ரியல் மட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# நீச்சல் தங்க மகனின் புதிய அவதாரம்

நீச்சல் வீரரான மைக்கல் பெல்ப்ஸ், தற்போது கோல்ப் விளையாட்டில் கால் பதித்துள்ளார். அமெரிக்காவின் நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ், பால்டிமோர் புல்லட் என்றழைப்படும் இவர், ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் 18 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என, மொத்தம் 22 பதக்கம் வென்றவர். உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டிகளில் (2001 முதல் 2011 வரை) மட்டும், மொத்தம் 26 தங்கம், 6 வெள்ளி, ஒரு வெண்கலம் கைப்பற்றினார்.

2001இல் ஜப்பானில் நடந்த போட்டியில் 15 வயது, 9 மாதத்தில், 200 மீற்றர், நீச்சலில் தங்கம் வென்று, உலக சாதனை படைத்தார். இப்போது, 12 ஆண்டுகளுக்குப் பின் முதன் முறையாக பெல்ப்ஸ் இல்லாமல், 15ஆவது உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி, பார்சிலோனாவில் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் கோல்ப் போட்டியில் மைக்கல் பெல்ப்ஸ் கால் பதிக்கவுள்ளார். இது குறித்து பெல்ப்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், நீச்சல் உலகிற்கு



நிறைய செய்து விட்டேன். இது அனைவருக்கும் தெரியும். இனிமேல் நீந்தப் போவதில்லை. இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் தான் உள்ளேன். இதனால் கோல்ப் போட்டியை தேர்வு செய்துள்ளேன். எளிமையான போட்டி என்றாலும், மிகவும் கடினமானது என்றார்.

அமெரிக்க வீரர் டைகர் உட்சிற்கு பயிற்சியாளராக இருந்த ஹான்க் ஹனே தான், பெல்ப்சிற்கு ஆலோசராக உள்ளார். இவர் கூறுகையில், கோல்ப் போட்டியில் மிகவும் தீவிரமாக உள்ளார் பெல்ப்ஸ். ப்யிற்சிக்குப் பின் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளார் என்றார்.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாள் கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட சச்சின் பங்கேற்றார். பிரதமர் மன்மோகன் சிங், அவை தலைவர் ஹமீத் அன்சாரி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சச்சினுக்கு கைலாகு கொடுத்து வரவேற்றனர். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மாநிலங்களவை ராஜ்யசபா எம்.பி.யாக சச்சின் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது.

# இறுதியில் மோதல்



(கொர்ல்ஸ்பாத்)

அமெரிக்காவில் நடைபெற்று வரும் தெற்கு கலிபோர்னியா ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்காவுடன் அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசர் மோதவுள்ளார்.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றது. அரையிறுதியில் சேர்பியாவின் அனா இவானோவிச்சுடன் நேற்று முன்தினம் மோதிய அசரென்கா, முதல் செட்டில் அதிரடியாக விளையாடி 6-0 என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் சுதாரித்துக் கொண்டு விளையாடிய இவானோவிச் 6-4 என்ற கணக்கில் வென்று பதிலடி கொடுக்க 1-1 என சமநிலை ஏற்பட்டது. மூன்றாவது செட்டில் இவானோவிச்சின் சேர்வீஸ் ஆட்டங்களை முறியடித்து புள்ளிகளைக் குவித்த அசரென்கா 6-0, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் போராடி வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதியில் பிரான்சின் வர்ஜினி ரஸானோவுடன் மோதிய சமந்தா ஸ்டோசர் 7-6 (7-2), 6-3 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.


# தங்கம் அள்ளிய அமெரிக்க மங்கை



ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சிலோனாவில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் நீச்சல்போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த மிஸ்ஸி பிராங்க்ளின் 200 மீற்றர் பேக் ஸ்ட்ரோக் நீச்சலில் தனது ஐந்தாவது தங்கப் பதக்கத்தைப் பெற்று, அதிக தங்கப் பதக்கங்கள் பெற்ற முன்னைய உலக சாதனையைச் சமன் செய்தார். 18 வயதான மிஸ்ஸி 2 நிமிடம் 4.76 வினாடிகளில் இந்த சாதனையை எட்டினார். அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பெலிண்டா ஹோக்கிங் இரண்டாவதாக வந்து வெள்ளிப்பதக்கத்தையும், கனடா வின் ஹிலாரி கால்ட்வெல் மூன்றாவதாக வந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர். உலக சம்பியன்ஷிப் போட்டியில் ஒரு பெண் பெற்ற அதிக பட்ச தங்கப்பதக்கங்கள் இதுவாகும். 1978ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த டிரேசி காக்கின்ஸ் இந்தச் சாதனையை முதலில் நிகழ்த்தினார். அதன்பின் கடந்த 2007ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த லிப்பி டிரிக்கட் ஐந்து தங்கப் பதக்கங்களைப் பெற்ற பெருமைக்கு உரியவரானார். மிஸ்ஸி பிராங்க்ளின் பெற்ற ஐந்து தங்கப்பதக்கங்களும் 200 மீற்றர் பேக்ஸ்ட்ரோக், 100 மீற்றர் பேக்ஸ்ட்ரோக், 200 மீற்றர் ப்ரீஸ்டைல், 4ஓ100 மற்றும் 4ஓ 200 மீற்றர் ப்ரீஸ்டைல் போட்டிகளில் அவர் பெற்ற வெற்றிகளாகும்.

# மாகாண விளையாட்டு விழா; யாழ்.மாவட்டம் சம்பியன்





(வவுனியா)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட விளையாட்டு விழாவில் யாழ். மாவட்டம் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. வடக்கு மாகாண விளையாட்டு விழா கடந்த 1ஆம் திகதி முதல் 3ஆம் திகதி வரை வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இறுதி நாளில் 100 மீற்றர் ஓட்டம், அஞ்சலோட்டம் மற்றும் இடைவேளை நிகழ்வுகள் எனப் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர். இதில் ஒட்டுமொத்தப் புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்டம் 225 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. தொடர்ந்து வவுனியா மாவட்டம் 103 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், 52 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டம் மூன்றாமிடத்தையும், 48 புள்ளிகளைப் பெற்ற முல்லைத்தீவு மாவட்டம் நான்காமிடத்தையும், 41 புள்ளிகளைப் பெற்ற கிளிநொச்சி மாவட்டம் ஐந்தாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார். மற்றும் வட மாகாண விளையாட்டுச் செயலகப் பணிப்பாளர், மாவட்ட விளையாட்டு அதிகாரிகள், பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள், செயலாளர்கள், வீர,வீராங்கனைகள், இரசிகர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (93)



## மரதன் ஓட்டப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 39ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மரதன்ஓட்டப் போட்டி நடாத்தப்படவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் தமது பதிவுகளை விரைவில் மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர். போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டளார்கள் தெரிவித்தனர்.

## இறுதிப் போட்டி ஒத்திவைப்பு

(கைதடி)

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே, இன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த இப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை இப்போட்டி இடம்பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (118)

## விளையாட்டுச் செய்திகள்

### வதிரி டையமன்ஸ் நூற்றாண்டு விழா கால்பந்து

# மன்னார் லூசியஸ், நாச்சிக்குடா மேரிஸ் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி

(நெல்லியடி)

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் வடமாகாண கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்துத்தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மன்னார் சென். லூசியஸ் மற்றும் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன. வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு பருத்தித்துறை கால்பந் தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வட மாகாண கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டத் தொடரை நடாத்திவருகின்றது.

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும்இப்போட்டி லீக் முறையில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், மன்னார் சென். லூசியஸ் அணியும் மோதின. இரு அணிகளும் சம பலம் கொண்ட அணி என்பதால் போட்டி ஆரம் பமாவதற்கு முன்னரே ஆட்டம் பரபரப்பிற்கு குறையாதவாறு இருக்கும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்பை பொய்யாக்கும் வகையில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியின் ஆட்டம் அமைந்திருந்தது. முதற்பாதி ஆட்டத்தில் சென். மேரிஸ் அணியின் பந்து பரிமாற்றத்திலிருந்து அனைத்து வகையிலும்ஜொலித்துக் கொண்டிருந்தனர். இவர்களின் திறன் அனைத்தையும் சிதறடிக்கும் வகையில் மன்னார் சென். லூசியஸ் அணியின் கோல் காப்பாளர் பீற்றர் அனிற்றிஸ் றோய் சிதைத்தவண்ணமிருந்தார். இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது. பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகிய பின்னரும் நாவாந்துறை சென். மேரிஸ் அணியின் ஆக்கிரமிப்பே அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால், சென். லூசியஸ் அணியின் கோல் காப்பாளரின் திறமையான செயற்பாட்டால் சென். மேரிஸ் அணி கோலைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு தவிடுபொடியாக்கப்பட்டது. இதன் காரணமாக சென். மேரிஸ் அணி சலிப்புற்று ஆடியது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள சென் லூசியஸ் அணி முயன்றது. இதன் பயனாக ஆட்டம் நிறைவுற இரண்டு நிமிடங்கள் இருக்கையில் பிராங்கிளின் சிறப்பானதொரு கோலைப்போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இறுதியில்1-0 என்ற கோல் கணக்கில் மன்னார் சென். லூசியஸ் அணி வெற்றிபெற்று புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டியில் சிறப்பான முறையில் செயற்பட்ட மன்னார் சென். லூசியஸ் அணி கோல் காப்பாளர் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

இதேவேளை, நாச்சிக்குடா சென்.மேரிஸ்அணியும் புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி முதல் போட்டியில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியை 4-2 என்ற கோல் கணக்கிலும், மயிலங்காடு ஞானமுருகன் அணியை 5-2 என்ற கோல் கணக்கிலும் வென்றது. நாவண்டில் கலைமதி அணியுடன் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை செய்தது. (17)

## கைதடியின் தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான இரண்டு தங்கப் பதக்கம் வென்ற கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய வீரர் எம். முரளிதரன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டியில் 17 வ்யது நீளம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றார். வித்தியாலய சமூகத்தினால் அண்மையில் முரளிதரன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். அதிபர் சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரம், வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள், விளையாட்டு நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்ததுடன் தேசிய போட்டியில் சாதித்து வித்தியாலத்திற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்தினர். (51)



# காகம் எப்படிக் கறுப்பானது?

- ந. லட்சுமி -

ஆதிகாலத்தில் காகங்கள் சற்று நீண்ட தோகை போன்ற இறக்கைகளுடன் வெண்மை நிறத்தில்தான் இருந்தனவாம்! அப்படிப்பட்ட காக்கை இனத்தில் ஒரு காக்கைக் குஞ்சு தன் பெற்றோருடன் ஒரு மரத்தில் வசித்து வந்தது. அது ஓயாமல் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும். "அது என்ன?", "இது ஏன் இப்படி?", "இதைச் செய்தது யார்?" என்று தன் பெற்றோரிடம் கேட்டுக் கொண்டே இருந்தது.

அது ஒருநாள் மரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்ததும், அதை ஒரு பூனை தாவிப் பிடிக்க முயன்றது. இதனால் அஞ்சி நடுங்கிய காக்கைக் குஞ்சு மீண்டும் தன் கூட்டிற்கே சென்று, அமர்ந்து கொண்டது. அதன் தாய் அதனிடம், "அவை விலங்குகள்! நம்மை விட வலிமை மிகுந்தவை! நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!" என்றது.

உடனே காக்கைக் குஞ்சு, "வலிமை என்றால் என்ன அம்மா?" என்றது.

"எப்படிப்பட்ட சூழலையும் சமாளித்து உயிர் வாழும் திறனே வலிமை எனப்படும்..." என்றது தாய்.

இப்பொழுது அந்த காக்கைக் குஞ்சிற்கு உலகிலேயே வலிமை மிகுந்த உயிரினத்தைக் காண ஆவல் பிறந்தது. மறுநாள் அந்த காக்கைக் குஞ்சு அந்தப் பூனையிடம், "அண்ணே! உன்னைவிட வலிமை மிகுந்தவர் யார்?" என்று கேட்டது. அதற்குப் பூனை, "என்னைவிட வலிமை மிகுந்தவன் நாய்" என்றது.

காக்கைக் குஞ்சு உடனே நாயிடம் சென்று, "உன்னை விட வலிமை மிகுந்தவர் யார்?" என்றது.

நாயோ தன்னைவிட வலிமை மிகுந்தது காளை மாடு என்றது. காளை மாட்டிடம் சென்று கேட்க அது "யானை" என்றது. யானையிடம் கேட்டால் அது சிங்கமும் புலியும் தன்னைவிட வலிமை மிகுந்தவை என்று கூறியது.

எனவே அவற்றைப் பார்க்க காட்டுக்குச் சென்றது அந்த காக்கைக் குஞ்சு. அங்கு சிங்கத்தின் குகை வாயிலில் ஒரு சிங்கம் அம்பு பாய்ந்து இறந்துகிடந்தது. அதைச் சுற்றிலும் சில சிங்கங்கள் நின்று கொண்டிருந்தன. சற்றுத் தொலைவில் புலி ஒன்று வலையில் மாட்டித் தவித்துக் கொண்டிருந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு புலியின் அருகில் சென்ற காக்கை குஞ்சு, "அண்ணே, வலிமை மிகுந்த உங்களை வலையில் மாட்டிவிட்டவர், உங்களைவிட வலிமை மிகுந்தவராகத்தான் இருக்கவேண்டும். தயவுசெய்து அவர் யார் என்று என்னிடம் கூறுங்கள்?" என்று கேட்டது.

கோபத்தில் உறுமிய புலி, "இரண்டு கால்களையும் இரண்டு கைகளையும் உடைய மனிதன்தான் அவன்!" என்றது. "மனிதனின் வலிமை அவன் உடலில் இல்லை! அவன் அறிவில்தான் உள்ளது! தன்னால் செல்லமுடியாத இடங்களில் இருக்கும் பகைவர்களை வெல்ல ஆயுதங்களைப் பயன்படுத்துவான். மனிதனின் அறிவாலும் ஆற்றலாலும் செய்யமுடியாத காரியம் என்று எதுவும் இல்லை. தன் அறிவைப் பயன்படுத்தியே அங்கிருக்கும் சிங்கத்தை வீழ்த்தியுள்ளான். என்னையும் சிறைப் பிடித்து விட்டான்.." என்று கூறியது.

உடனே அந்த காக்கைக் குஞ்சிற்குத் தானும் மனிதன் போல் அறிவு பெற வேண்டும் என்ற ஆசை பிறந்தது. சற்று நேரத்தில் அங்கு வந்த ஒரு நரியிடம் சென்று, "அண்ணே! மனிதன் தன் அறிவை எங்கு வைத்திருப்பான் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டது.



அதற்கு நரி, "அதைத் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப்போகிறாய்?" என்றது.

"அவனிடம் உள்ள அறிவை நான் எடுத்துக் கொள்வேன். இதனால் நான் உலகிலேயே மிகவும் வலிமை மிகுந்த உயிரினமாவேன்! என் இனத்தைக் காப்பேன்!" என்றது காகம்.

"நீ அளவுக்கு மீறி ஆசைப் படுகிறாய். இதனால் உனக்குத் துன்பமே நேரும்!" என்றது. இதை சற்றும் பொருட்படுத்தாத காக்கைக் குஞ்சு, "அண்ணே! என்னை எப்படியாவது மனிதர்கள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்!" என்று கெஞ்சியது.

இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த நரி, "மனிதர்கள் என்னைக் கண்டால் கொன்றுவிடுவர். உன்னை மிக எளிதாக விரட்டிவிடுவர்..." என்றது.

"அப்படியென்றால் மனிதனின் அறிவை நான் எப்படிப் பார்ப்பது? அது எப்படி இருக்கும்?" என்றது.

"எனக்குத் தெரிந்த வரையில் பகலில் மனிதன் தன் அறிவைத் தன்னுடன் எடுத்துச் சென்றுவிடுவான். ஆனால் இரவில் தூங்கும் பொழுது அதை எங்கோ ஓரிடத்தில் யாரும் எடுக்கமுடியாதபடி ஒளித்துவைத்துவிடுவான். வேண்டுமென்றால் உன்னை அருகில் உள்ள கரும்புத் தோட்டத்திற்கு இன்று இரவு அழைத்துச் செல்கிறேன். நாம் இருவரும் ஒளிந்து நின்றுகொண்டு அங்கு காவலிருக்கும் மனிதர்களைக் கண்காணிப்போம்!' என்று கூறியது நரி.

அதன்படியே அங்கு ஒளிந்து சென்று இருவரும் கண்காணிக்கத் தொடங்கினர். அங்கு காவலில் இருந்த மனிதர்கள் இரவு கடும் குளிராக இருந்ததால் ஓரிடத்தில் நெருப்பு மூட்டிக் குளிர் காய்வதற்காக காய்ந்த சருகுகளையும் சுள்ளிகளையும் குவித்துவைத்தனர். ஒரு மனிதன் இரு கட்டைகளை உரச அதிலிருந்து தீப்பொறி தோன்றவே காய்ந்த சருகுகள் உடனே பற்றி எரியத் தொடங்கின.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த நரி, "அதோ வெளிச்சமாகத் தெரியும் அந்த ஒளியே மனிதனின் அறிவாகும்!" என்றது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த காக்கைக் குஞ்சு எப்படியாவது அந்த அறிவைத் தன் கூட்டத்தாரிடம் கொடுக்க எண்ணியது. பறந்து சென்று எரியும் நெருப்பில் வீழ்ந்தது. திடீரென்று காக்கைக் குஞ்சு ஒன்று பறந்து வந்து நெருப்பில் விழுந்ததைக் கண்ட மனிதர்கள், அதை நெருப்பிலிருந்து எடுத்து தண்ணீரில் போட்டனர்.


இதற்குள் அதன் நீண்ட தோகை போன்ற இறகுகள் முழுவதுமாக எரிந்துவிட்டிருந்தன. உடலெங்கும் தீக்காயம் ஏற்பட்டு இருந்தது. வெண்மை நிறத்தில் இருந்த காக்கைக் குஞ்சு கருஞ்சாம்பல் நிறத்தில் மாறி இருந்தது. காக்கைக் குஞ்சு நெருப்பில் விழுந்த அடுத்த நொடியே நரி தப்பித்து ஓடிவிட்டது.


தாய்க் காகத்தால் தன் குஞ்சை அடையாளம் காணமுடியவில்லை. காலங்கள் உருண்டோடின. குஞ்சாக இருந்த அது, பெட்டைக் காகமாக வளர்ந்து முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. அதன் குஞ்சுகள் சாம்பல் நிறத்தில் இருந்தன. அதற்குப் பிறந்த குஞ்சுகள் கருஞ்சாம்பல் நிறத்திலும் நாளடைவில் அதற்குப் பிறகு பிறந்த குஞ்சுகள் முழுமையாக கருமை நிறத்திலும் மாறின.

இன்று கூட சில காக்கைகளின் கழுத்துப் பகுதி சாம்பல் நிறத்தில் இருப்பதைக் காணலாம். தன் தகுதிக்கு மீறி ஆசைப்பட்டதால், காகம் கறுப்பான கதை இதுதான்!

# உலகின் பிரமாண்ட கட்டடம்!

அதிசயிக்கத்தக்க அதிசயங்களை நிகழ்த்துவதில், சீனர்களை மிஞ்ச முடியாது. சீனாவிலுள்ள, செங்டு என்ற நகரில், உலகின் மிக பிரமாண்டமான கட்டடம், சமீபத்தில் திறக்கப்பட்டது. 100 மீற்றர் உயரம், 500 மீற்றர் நீளம், 400 மீற்றர் அகலம் உடைய, இக் கட்டடம், 17 இலட்சம் சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது. இதில், பிரமாண்டமான வர்த்தக வளாகம், செயற்கை நீரூற்று, செயற்கை கடற்கரை, அலுவலகங்கள், நட்சத்திர ஹோட்டல்கள், கருத்தரங்க அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. சீனாவின், புதிய அடையாளமாக உருவெடுத்துள்ள இந்த கட்டடத்துக்கு, "புதிய நூற்றாண்டின் உலக வர்த்தக மையம்" என, பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதைப் பார்ப்பதற்காக, சுற்றுலா பயணிகள் குவிகின்றனர்.





# சமயோசிதம்!

தலைமறைவாகி இருந்த ரஷ்யப் புரட்சியாளர் லெனினை கைது செய்ய ஸார் அரசு, காவல் துறைக்கு உத்தரவிட்டிருந்தது. மொஸ்கோ நகரத்தில் அனைத்து தெருக்களிலும் காவல் துறை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது.

பொலிஸ்காரர்களின் கெடுபிடி நிறைந்த தெரு ஒன்றில், லெனின் ஒரு குடையைப் பிடித்தபடி, ஜாலியாக விசிலடித்துக் கொண்டு மெல்ல நடைபோட்டு வந்து கொண்டிருந்தார்.

"இவரைப் பார்த்தால் லெனின் மாதிரி தெரிகிறதே?" என்றார் ஒரு பொலிஸ்காரர்.

அதற்கு மற்றவர், "சேச்சே... லெனினாக இருந்தால் இப்படி ஜாலியாக விசிலடித்துக் கொண்டு, அதுவும் நம் முன்னே செல்வாரா? அவர் எங்கே ஒளிந்து கொண்டு இருக்கிறாரோ...? இவர் வேறு யாரோ..." என்றார்.


அதற்குள் லெனின் அந்தத் தெருவைக் கடந்து வேறு தெருவுக்குச் சென்று தப்பிவிட்டார்.

தைரியம், நுண்ணறிவோடு சமயோசிதமும் கொண்டிருந்ததால் தப்பித்தார்.

# எரியும் விளக்கு!

உடல் நலம் குன்றி படுக்கையில் கிடந்த இந்திய எழுத்தாளர் பிரேம் சந்த், அந்நிலையிலும் எழுதிக் கொண்டே இருந்ததைப் பார்த்து, அவர் மனைவி கேட்டார்: இந்த நிலையிலும் நீங்கள் எழுதத்தான் வேண்டுமா? நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டு உடல் நலத்தைக் கவனிக்கக் கூடாதா?

பிரேம் சந்த் கூறினார்: ஒரு விளக்கின் கடமை - வெளிச்சம் தருவதுதான். அது பிறருக்கு நன்மை தருகிறதா? தீமை தருகிறதா? என்பதைப் பற்றி அதற்குக் கவலையில்லை. எண்ணெயும் திரியும் இருக்கும்வரை எரிந்து ஒளிவீசிக் கொண்டுதான் இருக்கும். எண்ணெய் தீர்ந்தவுடன் விளக்கு தானாகவே அணைந்துவிடும்!



# எம்.கே.டி. எனும் பண்ணிசைப் பாவலன்

03

- வே.முத்துக்குமார் -



தமிழ் சினிமாவினுடைய ஆரம்ப கால சாட்சிகளாக நிறைய கர்நாடக இசை வித்வான்கள் திகழ்ந்தனர். அரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதர், வித்வான் சீனிவாச ஐயர், மன்னார்குடி நரசிம்ம ஐயங்கார், மதுரமங்கலம் நடேச ஐயர், மகாராஜ புரம் விஸ்வநாத ஐயர், மகாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி, முசிறி சுப்பிரமணிய ஐயர், ஜி.என்.பாலசுப்பிரமணியம், துறையூர் ராஜகோபால சர்மா, வி.வி. சடகோபன், எம்.எம்.மாரியப்பா, எம்.எம். தண்டபாணி தேசிகர், கொத்தமங்கலம் சீனு, கே.பி.சுந்தராம்பாள், எம்.எஸ். சுப்புலெட்சுமி, என்.சி. வசந்தகோகிலம் மற்றும் எம்.கே.டி என பல வித்வான் கள் தமிழ் சினிமாவில் அறிமுகமான போதிலும் கூட எல்லோராலும் திரைத்துறையில் ஜொலிக்க முடிய வில்லை. திரைத்துறையில் அறிமுக மான அதே வேகத்திலேயே மங்கிப் போன வித்வான்கள் எத்தனையோ பேர் உண்டு. கர்நாடக இசையைத் திரையிசைக்கு ஏற்றவாறு வழங்குவதில் சில வித்வான்கள் மிகுந்த பிரயத் தனப்பட வேண்டியிருந்தது. ஆனால் தனது தன்னிகரில்லாத, மதுரமான குரல்வளம் காரணமாகத் திரையுலகில் அறிமுகமான காலத்திலிருந்து தொடர்ந்து திரைத்துறையில் இயங்கிய காலம் வரையிலும் தொடர் வெற்றி களாகக் குவித்த பெருமை எம்.கே.டி.க்கு மட்டுமே உண்டு.

எம்.கே.டி. முதல்முறையாக நாடகத் தில் கதாநாயகனாக அறிமுகமான பவளக்கொடி 1934ஆம் ஆண்டு திரைப்படமாக எடுக்கப்பட்டது. இப்படத்தைத் தொடர்ந்து வெளியான அவரது ஒன்பது திரைப்படங்களும் பெருத்த வெற்றியைப் பெற்றன. அப்படங்களின் வெற்றிக்கு முத்தாய்ப் பாக அவருடைய பாடல்கள் திகழ்ந் தன. அந்தக் காலத்திய திரைத்துறை நடிகர்களின் நடிப்போடு ஒப்பிடுகிற போது எம்.கே.டி.யினுடைய நடிப்பாற் றல் மிகச் சாதாரணமாகவே இருந்த போதிலும் கூட, தனது இசையாற்ற லால் அவர் அதை ஈடு செய்தார். கர்நாடக இசை ராகங்களைத் திரை யிசைக்கு ஏற்றவாறு ரசம் பூசிக் கொடுப்பதில் வல்லவராக அவர் திகழ்ந்தார். சுமார் பத்து வருடங்க ளுக்கு தமிழ்த் திரையுலகின் சூப்பர் ஸ்டாராக வலம் வந்தார் எம்.கே.டி.

எம்.கே.டி.யினுடைய முதல் இசைத் தட்டின் பெயர் "சிவபெரு மான் கிருபை". "சுரதி" (கர்நாடக இசைக் கச்சேரிகளின் இறுதியில் பாடப்படுகின்ற ராகம்) ராகத்தில் அமைந்த அப்பாடல் நவீன சாரங்கதாரா திரைப்படத்தில் இடம்பெற்றதாகும். அவருடைய பெரும்பாலான திரையி சைப் பாடல்கள் "சுரதி" ராகத்தில் அமைந்ததாகும். சுரதியைப் போன்றே ரதிபதிப்ரியா, ரஸாலி போன்ற ராகங்களைத் தன்னுடைய திரையி சைப் பாடல்கள் பலவற்றில் அவர் தொடர்ந்து பிரயோகப்படுத்தி வந்தார். "சாருகேசி"யில் (இந்த ராகத்தில் ஸ்ரீ தியாகய்யர் ஒரே ஒரு கீர்த்தனையை மட்டுமே இயற்றியுள்ளார்) எம்.கே.டி. பாடி வெளியாகி பெரும் ஹிட்டான "மன்மதலீலை" பாடலுக்குப் பிறகு பெரும்பாலான திரையிசைப் பாடல்கள் "சாருகேசி"யில் அமைக்கப்பட்டன. இந்தப் பாடல் மக்களிடையே பெற்ற வரவேற்பைப் பார்த்துவிட்டு பெரும்பாலான கர்நாடக இசை வித்வான்கள் கூட தங்கள் கச்சேரியில் "சாருகேசி"யை அதிகளவில் இசைக்கத் தொடங்கினர். டி.எம்.சௌந்தராஜன் பாடி புகழ்பெற்ற "வசந்தமுல்லை"யும், எம்.எல்.வசந்தகுமாரி பாடியுள்ள "ஆடல் காணீரோ"வும் "சாருகேசி"யில் அமைந்ததாகும். கர்நாடக இசைக் கச்சேரிகளில் வித்வான்கள் பாடிப் புகழ்பெற்ற பாடல்களின் ராகங்களை அடிப்படையாகக் கொண்டு சில பாடல் களைத் தன்னுடைய திரைப்படத்தில் எம்.கே.டி. பயன்படுத்திக் கொண்ட துண்டு. எம்.எம்.தண்டபாணி தேசிகரால் புகழடைந்த பாடலான "ஜகத்ஜனனி"யை, அப்படியே ரதிபதிப்ரியாவில் "மனம் கனிந்தே" எனவும், மதுரை மணி பாடியுள்ள "எப்ப வருவாரோ" பாடலை, அப்படியே ஜோன்பூரியில் "சத்வகுணபோதண்" எனவும், பெரும்பாலான பஜனைகளில் சம்பிரதாயமாக இசைக்கப்படுகின்ற "ஜானகி ரமணா"வை, அப்படியே, காபியில் "தியானமே எனது" எனவும், ஆலத்தூர் சகோதரர்கள் பாடிப் புகழடைந்த "முக்தி அளித்திடும் மூலஸ் தானரரை", அப்படியே நடனமாகிரி யாவில் "ஆதி தேவனே" எனப் பாடி திரையிசையை ஒருவித ஆழ்ந்த ரசிப்புத் தன்மைக்கு உள்ளாக்கிய வல்லமை எம்.கே.டி.இற்கு உண்டு.

எம்.கே.டி. பாடி அவருக்குப் பிடித்த பாடல்களில் ஒன்று "சொல்லு பாப்பா" பாடலாகும். இப்பாடலை ஆரம்பத்தில் அவர் சத்தியசீலன் படத்துக்காகப் பாடினாலும், பின்னர் அதை அவர் தயாரித்த திருநீலகண்டர் திரைப்படத்தின் டைட்டில் பாடலாகப் பயன்படுத்திக் கொண்டார். பின்வந்த காலங்களில், சென்னையில் நடைபெற்ற கர்நாடக இசை மேடைகளில் உரை யாற்றி விட்டு இறுதியாக "சொல்லு பாப்பா" பாடலைப் பாடிவிட்டே கீழே இறங்கினார். ஒரே ராகத்தைப் பல்வேறு வகையான உணர்ச்சி பாவங்களோடு பாடுகின்ற தனித்தன்மையை அவர் பெற்றிருந்ததற்கு குறிப்பிட்ட சில பாடல்களை உதாரணமாகச் சொல்லலாம். சற்றே உற்சாகமாக, சந்தோஷமாக "சிந்துபைரவி"யில் "வதனமே சந்திர பிம்பமோ" எனப் பாடிவிட்டி, அதே ராகத்தில் சற்றே அமைதியாக, துக்கமாக "பூமியில் மானிட, வன்பசி பிணி" எனப் பாடியுள்ளார். இதே போன்று "செஞ்சுருட்டி"யில் "வள்ளலை பாடும்" என ஆன்மீகத் தொனியில் பாடிவிட்டு, பிறகு வேறொரு தொனியில் "ராதை உனக்கு கோபம்" எனக் கவித்துவமாக ரசனையாகப் பாடியுள்ளார். எம்.கே.டி. யினுடைய ஆன்மீகப் பாடல்களைக் காட்டிலும் அவரது டூயட் பாடல்களே அதிகளவில் புகழடைந்தன. மாய பிரபஞ்சத்தில், சந்திர சூரியர், மானே நான், உன் அழகை மற்றும் வசந்த ருது ஆகிய டூயட்கள் ரசிகர்களால் அதிகளவில் முணுமுணுக்கப்பட்டன.

(தொடரும்)



# நன்றித் திருவிழா! இன்று ஆடி அமாவாசை

இந்து மதத்தினர் ஒரு ஆண்டை, உத்ராயணம், தட்சிணாயணம் என பிரிப்பர். "உத்ரம்" என்றால் வடக்கு. சூரியன் வடக்கு நோக்கி பயணிக்கும் காலம் இது. "தட்சிணம்" என்றால் தெற்கு. தட்சிணாமூர்த்தி தெற்கு பார்த்து காட்சி தருகிறார். சூரியன் தெற்கு நோக்கி பயணிக்கும் காலம் இது.

உத்ராயணமும், தட்சிணாயணமும் இணைந்த 12 மாத காலம், தேவர்களுக்கு ஒருநாள். இதில், உத்ராயணம் பகல் பொழுது; தட்சிணாயணம் இரவுப்பொழுது. வடக்கு நோக்கி சூரியன் பயணிக்கும் உத்ராயண காலம் தை மாதம் தொடங்கும். இந்த மாதத்தில் தேவர்கள் விழித்துக் கொள்வர் என்பது ஐதீகம். இக்காலத்தில் வரும் தை அமாவாசை முக்கியமானது.

தட்சிணாயண காலமான ஆடி முதல் மார்கழி வரை தேவர்கள் உறங்கும் வேளை. தேவர்கள் உறங்குவதால், நம் முன்னோர் பிதுர்லோகத்தில் இருந்து இறங்கி வந்து நம்மைப் பாதுகாப்பர். அவர்களை வரவேற்கும் நன்னாளே ஆடி அமாவாசை.

நன்றி உணர்வுள்ள ஒவ்வொருவரும், இந்நாளில் முன்னோரை நினைவுகூர்ந்து வரவேற்பர். தாயும், தந்தையும் காலமாகி விட்டால் நம் மனம் வேதனைப்படுகிறது. அவர்கள் நமக்காக பட்ட கஷ்டங்களை எண்ணி கண்ணீர் வடிக்கின்றோம். படிப்பு, திருமணம், பிற்கால வாழ்வுக்கான சொத்து சேர்த்தல் என, ஒவ்வொரு நிமிடத்தையும் அவர்கள் நமக்காகவே செலவழித்தனர். தாத்தா, பாட்டி... நம் முப்பாட்டனார் மற்றும் முப்பாட்டி காலத்து உலக நடப்பைச் சொல்லி, அந்த காலத்தின் தொடர்ச்சி நாம் என்பதை உணரவைத்தனர். இறந்து போன நம் முன்னோர்களை இந்நாளில் நினைவு கொள்வதன் மூலம், அவர்கள் நம்மோடு வாழ்ந்த அந்த இனிய நாட்களை அசைபோட வைக்கின்றனர்.

இவர்களுக்காக நாம் செய்யப்போவது... அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் நம் வசம் இருந்தால், அவற்றை அந்நாளில் எடுத்து பூசை செய்யலாம். அவர்களுக்கு பிடித்தமான உணவு வகைகளைப் படைத்து, அவர்களை ஒத்த வயதினருக்கு கொடுத்தால், அவர்களே நேரில் பெற்றுச் செல்வதாக ஐதீகம்.

ஆடி அமாவாசை நன்னாளை, ஒரு நன்றி கூறும் விழாவாக எண்ணி, நம் முன்னோருக்கு அஞ்சலி செய்வது இந்துக்கள் வழக்கம்.

துருக்கியைச் சேர்ந்த, 42 வயதான இப்ராகிம் யுசெல், கடந்த 26 ஆண்டுகளாக புகை பிடித்து வருகிறார். தினமும் நான்கு பெட்டி சிகரெட்களை ஊதித் தள்ளும் இவர், யார் அறிவுரை கூறினாலும் கேட்பதில்லை. திடீரென்று ஒரு நாள் சிகரெட் பிடிப்பதை தவிர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உதித்துள்ளது. அதை செயல்படுத்த ஹெல்மெட் வடிவில் உலோகத்தாலான, இரும்புக் கூண்டு ஒன்றைச் செய்து, அதை தன் தலையில் மாட்டிக் கொண்டார்.


இந்த கூண்டில், செப்புக் கம்பிகள் இறுக்கமாக பின்னப் பட்டுள்ளன. உறங்கும் நேரம், சாப்பிடும் நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில், இந்த கூண்டு அவரது தலையில் மாட்டப்பட்டிருக்கும்.

இந்த கூண்டை திறப்பதற்கு, இரண்டு சாவிகள் உள்ளன. ஒரு சாவி, அவரது மனைவியிடமும், மற்றொரு சாவி, அவரது மகளிடமும் உள்ளன. அவர்கள் மனது வைத்தால் தான், கூண்டை திறக்க முடியும்.

சுலபத்தில் சில பழக்கங்கள் நம்மை தொற்றிக் கொள்கின்றன. ஆனால், அதிலிருந்து விடுபடுவதற்கு எப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டியுள்ளது பாருங்கள்!



# சிகரெட்டை இப்படியும் நிறுத்தலாம்!



# சூரியனின் புதிய படம்!

அமெரிக்காவிலுள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் சூரியனின் பிரத்தியேக புதிய படத்தை வெளியிட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் மூலம் அதிகம் அறியப்படாத இன்ர.ஃபேஸ் ரீஜன் என்னும் பகுதியை ஐரிஸ் கருவி படம் எடுத்துள்ளது. இந்த புதிய புகைப்படம் இதுவரை வெளிவராத பிரத்தியேக படம் என்பதால் பல ஆராய்ச்சிக்கு உதவும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஐரிஸ் என்று அழைக்கப்படும் interface region imaging spectrograph மூலம் படம் எடுக்கப்பட்டுள்ளது. ஸ்பெக்ட்ரோகிரா.ஃப்-ல் உள்ள அல்ட்ரா வயலட் டெலஸ்கோப் மூலம் சூரியனின் வெளிப்புற தோற்றமும் படம் எடுத்து வெளியிடப்பட்டுள்ளது.

# மக்கள் சேவையில் கமல்

## அழிவடைந்த எமது தேசத்தை அபிவிருத்தியால் கட்டியெழுப்புவோம்



தமிழ்மக்கள் தமக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த 3ஆத் திகதி சனசமூக நிலையத்தலைவர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற போது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்பள்ளிச் சிறார்களை சகலதுறைகளிலும் வளர்த்தெடுக்கின்ற பாரிய பொறுப்பு பெற்றோர் மற்றும் ஆசிரியரகளையே சாரும். அந்தவகையில் விளையாட்டுப் போட்டிக்கென பயிற்றுவிப்பாளர்கள் சிறந்த பயிற்சிகளை சிறார்களிற்கு வழங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சிறார்களை மிகுந்த ஆற்றலுடையவர்களாக, நற்பிரஜைகளாக உருவாக்க முன்பள்ளிக்கல்வியே ஆரம்பப்படியாக அமைகின்றது. எனவே பெற்றோர் தமது கடமைகளை சரியாகச் செய்யும் போதே தேசத்தின் நற்பிரஜைகளாக சிறார்களை வளர்த்தெடுக்க முடியும்.இதேவேளை அபிவிருத்தியினூடாக அழிவடைந்த எமது தேசத்தை கட்டியெழுப்பி, சகல அரசியலுரிமைகளையும் பெற்ற ஓர் தனித்துவமான இனமாக தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழுகின்ற சூழலை நிச்சயம் நாம் ஏற்படுத்துவோம் எனவே மக்கள் தமக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.தொடர்ந்து பல்வேறு போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய சிறார்களிற்கான பரிசில்களை மாவட்ட அமைப்பாளர் கமல் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் வழங்கிவைத்தனர்.

## நல்லவர்களாக வாழ்ந்தால் எதிர்காலம் நல்லதைத்தரும்



நல்ல மனிதர்களாக வாழுங்கள் எதிர்காலம் உங்களுக்கு நல்லதையே பெற்றுத்தருமென ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன்(கமல்) தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை றேஞ்சரஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையில் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட உதைபந்தாட்ட மற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்ட நிகழ்விலும் பரிசளிப்பு நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விளையாட்டு வீரர்கள் நற்பண்புடையவர்களாகவும், நற்பிரஜைகளாகவும் செயற்பட்டு உங்கள் பிரதேசங்களிற்கு பெருமை சேர்க்க வேண்டும். மாறாக வன்முறைக் கலாசாரம் கொண்டவர்களாக செயற்படக்கூடாது. விளையாட்டுக்கள் மூலமாக எமது உடலையும், உள்ளத்தையும் உற்சாகப்படுத்துகின்ற செயற்பாட்டை பெறமுடிகின்றது. இதனுடன் தேசத்தில் நல்ல மனிதர்களாக வாழுங்கள் எதிர்காலம் உங்களுக்கு நல்லதையே பெற்றுத்தரும். அவ்வாறே நம்பிக்கையுடன் செயற்படுங்கள் எதிர்காலம் வெற்றியைப் பெற்றுத்தருமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேசசபை தவிசாளரும், ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறை பிரதேச இணைப்பாளருமான ஜெயக்காந்தன்(காந்தன்), ஊர்காவற்றுறை பிரதேசசபையின் துணைத்தவிசாளர் அல்பேட், கிராமஅலுவலர் பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாணவர் கொலைகள் தொடர்பில் தொழிற்சங்கங்கள் அதிருப்தி

மாணவர்கள்அண்மையில் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு ஆசிரிய மற்றும் அதிபர் தொழிற்சங்கங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை வெலி வேரிய பிரதேசத்தில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மாணவர்கள் கொல்லப்பட்டனர்.இன்றைய தினம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவன் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழ ந்திருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கான பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

சம்பவம் தொடர்பில் உரிய விசார ணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளன.

மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்தின் அணுகுமுறைகள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக ஆசிரிய அதிபர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

## விசாரணைகளின் பின்னரான அறிக்கைக்கு அமைய நடவடிக்கை

(கொழும்பு)

வெலிவேரிய சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின் பின்னர் கையளிக்கப்படும் அறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என புதிய இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார். தலதா •மாளிகையில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்ட அவர், மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக விசார ணை நடத்த இராணுவ விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு ள்ளதாகவும் அந்த அறிக்கை கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தயா ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## போதனா வைத்தியசாலையை பராமரிக்க சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் பொது மக்கள் மற்றும் ஊழிய ர்களும் வைத்தியதிகாரிகளும் வைத்திய சாலையை பராமரிக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும் என யாழ்.போதனா வைத்திய சாலை பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிறி பவானந்தராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண்ணியல் நோய்ப் பிரிவுக்கு அண்மை யில் நூறு வில்லைகளும், அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் இங்கி லாந்து வைத்தியர் சங்கத்தினாலும், அவுஸ் ரேலிய மெரியச் சங்கத்தினாலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கண் வைத்தியர் மலரவனின் முயற் சியாலும், யாழ். போதனா வைத்திய சாலையின் நிர்வாகத்தின் முயற்சியாலும் கண் சத்திரசிகிச்சை உபகரணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் இவ்வாறான உதவிகள் தொடர்ந்து கிடைக்கும். அத்துடன் யு.என்.ஐ நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சைக்கான உபகரணம் ஒன்றை யும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இதன் மூலம் வடமாகாண மக்கள் நன்மையை அடைய முடியும் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு ஜப்பான் நாட்டு உதவியுடன் அமைக்கப்பட்ட மத்திய செயற்பாடு களுக்கான கட்டிடத் தொகுதியினை பராமரிக்க சுகாதார அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

புதிய கட்டடத்தை பராமரிப்பதில் சில சிக்கல்கள் எழும் என ஆரம்பத்தில் எதிர்வு கூறப்பட்ட போதும் வைத்தியசாலை நிர்வாகமும் ஒப்பந்தக்காரர்களினதும் சிறந்த செயற்பாட்டினால் அதனை பராமரிக்க முடிந்தது. அதனை தொடர்ந்து பேணுவதற்கு அனுபவப்பட்டவர்களின் சேவை தொடர்ச்சியாகத் தேவை.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் குளிரூட்டிகள், லிப்ற் என்பன ஒழுங்காக பராமரிக்கப்பட வேண்டும் . கட்டடத்தினை பராமரிக்க பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.அதனை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சினால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய நடைமுறைப்படுத்துவதற்கு சில செயற்திட்டங்களை வகுக்கப்பட்டு ள்ளது.

இதற்குரிய அனுமதி சுகாதார அமைச்சினால் கிடைக்கப்பெற்றதும் இதற்குரிய நடைமுறைகள் செயற்படு த்தப்படும் புதிதாக அமைக்கப்பட்டு தெரிவித்தார்.ஒரு வருடம் பூர்த்தியாக உள்ள இக்கட்டடத் தொகுயில் சில இடங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதனை அவதானிக்க கூடியவாறு உள்ளது என்றார்.

## மலையகத்தில் இடம்பெயர்வு

(கொழும்பு)

நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிராந்தியத்தில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை சுமார் 500 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க அதிபர் டி.பி.ஜி குமாரசிறி தெரிவித்துள்ளார்.

அவர்கள் 4 முகாம்களில் தங்கவைக்க ப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர அதிக மழை காரணமாக சில நீர்த்தேக்கங்களில் திறக்கப்பட்ட அவசர கதவுகள் தொடர்ந்தும் செயற் பாட்டில் உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதிக மழை காரணமாக லக்ஷபான, மவுசாக்கலை, காசல்ரி உள்ளிட்ட பிரதான நீர்த்தேக்கங்களின் அவசர கதவுகள் 6 அடி வரை உயர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிட த்தக்கது.இதுதவிர, விக்டோரியா நீர்த்தேக்கத்தின் அவசர கதவுகள் 8 அடிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், ரந்தெனிகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயரும் நிலை உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இதனிடையே, மத்திய, மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் காலநிலை அசாதார ணமாக நிலவும் என்று காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

# கட்டட வேலைகளை ஆளுநர் பார்வை



(யாழ்ப்பாணம்)
கைதடியில் அமைக்கப்படு கின்ற பிரதம செயலாளர் கொத்தணி அலுவலகங்களுக் கான கட்டட வேலைகளை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார்.

கட்டட வேலைகளின் முன் னேற்றம் குறித்து அவதானித்த துடன் கட்டட வேலைகளை விரைவுபடுத்துவதற்கான ஆலோ சனைகளையும் அது சம்பந்த மாக அதிகாரிகளுக்கு வழங் கினார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் கட்டடங்கள் திணைக் களப் பணிப்பாளர் எஸ்.மோகன தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)
இலங்கை திறந்த பல கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சான்றிதழ் கற்கை நெறிகளை நிறைவு செய்தவர் களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்கில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் வரவேற்பு ரையை இலங்கை திறந்த பல்கலைக்கழக பொறியியல் பீட பீடாதிபதியும், பேராசிரிய ருமான எஸ்.ஏ.அரியதுரை வழங்கவுள்ளார்.

## இடைவிலகிய மாணவர்கள் பாடசாலையில் இணைப்பு

(தென்மராட்சி)
தென்மராட்சி வலயப் பாட சாலைகளில் இருந்து இடை விலகிய 11 மாணவர்கள் மீண் டும் கல்வியைத் தொடர்வதற் காகப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் வரவு ஒழுங் கீனமான நிலையில் உள்ள மாணவர்களின் விபரங்களைப் பெற்ற வலயக் கல்விப் பணிப் பாளர், ஆசிரிய ஆலோசகர், கட்டாயக்கல்விக் குழுப் பொறுப் பாசிரியர், பாடசாலை ஆசிரி யர்கள் அடங்கிய குழுவினரு டன் இந்த மாணவர்களின் பெற்றோருடன் மேற்கொண்ட கலந்துரையாடல், ஆலோச னைகளினைத் தொடர்ந்து மாணவர்கள் பாடசாலைகளில் இணைந்து கல்வி நடவடிக் கைகளைத் தொடர்ந்து வருவ தாக வலயத்தினால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# யாழ். மத்திய கல்லூரியின் நடன அணி முதலிடம்

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கைப் பாடசாலை களுக்கிடையில் நடைபெற்று வரு கின்ற தேசிய நடனப்போட்டி களின் மாகாண மட்டப்போட்டி யில் யாழ்ப்பாணம் மத்திய கல் லூரியின் நடன அணி இரண்டு பிரிவுகளில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளது.

உரும்பிராய் இந்துக்கல்லூ ரியில் நடைபெற்ற மாகாணமட்ட தேசிய நடனப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்ப் பாணம் மத்தியகல்லூரியின் நடன அணியானது சாஸ்திரிய குழு நடனப்பிரிவில் அலாரிப்பு நடனம் முதலாமிடத்தினையும் கிராமிய குழு நடனப்பிரிவில் கோலாட்டம் முதலாமிடத்தினை யும் பெற்றுக்கொண்டுள்ளது.

இந் நடன ஆற்றுகைகளுக் கான நெறியாள்கையினை கல் லூரியின் நடனத்துறை ஆசிரியர் கலைமாணி 2 ஆம் லெப்ரினன் லிங்கராசா அனிருத்தன் மேற் கொண்டுள்ளார்.

மத்திய கல்லூரியின் நடன அணியினர் அண்மையில் நடை பெற்ற தமிழ்மொழித்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டு பிரிவுகளில் முதலா மிடத்தினைப் பெற்றுக்கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லண்டன் கைதடி ஒன்றியத்தினால் அபிவிருத்தி கலந்துரையாடல்


(கைதடி)
லண்டன் கைதடி ஒன்றிய மும், கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகமும் இணைந்து நடாத்திய மக்கள் நலன் நோன்பு அபிவிருத்திக் கான விசேட கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைதடியில் லண்டன் கைதடி ஒன்றியத் தலைவர் நா.கனோத் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கைதடி பிரதேசத்தில் பல்வேறு செயற்பாடுகள் குறித்துப் பலதரப்பினராலும் கருத்துக் கள் வழங்கப் பட்டன.

இதன்படி போது அமைப் புக்களின் உள்ளடக்கத்துடன் லண்டன் ஒன்றிய வேலைத் திட்டம் தொடர்பாகவும் தேவை களும் அதை நிவர்த்தி செய் தலும் எவ்வாறான செயற் பாட்டைச் செய்யலாம் என் பன பற்றியும் விவாதிக்கப்பட் டது.

இக்கலந்துரையாடலில் வளர்மதி சனசமூக நிலைய தலைவர், கைதடி நட்புறவுக் கழகத்தின் முன்னைநாள் தலைவர் மின்னொளி சன சமூக நிலைய பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், மின் னொளி மாதர்சங்க அமைப் புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத் துக்களை முன்வைத்தனர்.

இதன்பின்னர் ஒன்றியத் தலைவர், லண்டன் கைதடி ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகி யோர் பொது அமைப்புக்க ளுக்கு உதவிகள் வழங்கு வது பற்றிக் கலந்தாலோசித்த தாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (51)



தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட உதவிக் கல் விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற க.சின்னத்துரைக்கான சேவைநலன் பாராட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது...

# பதிவிறக்கப் பெட்டகம்

நரேந்திர மோடி பிரதமர் ஆவதை நான் விரும்பவில்லை எனச் சொன்ன கருத்தில் எனக்கு மாற்றமில்லை. பாரத ரத்னா விருதைப் பெற்றுக் கொண்டதன் மூலம் ஒரு தனிநபர் என்கிற வகையில் என் மனத்தை வெளிப்படுத்தும் உரிமையை நான் யாரிடமும் அடகு வைக்க இயலாது. பெரும்பான்மை யின் பக்கம் நிற்பதும் பேசுவதும் என் கடமை. தனி நபர் சுதந் திரம், சிறுபான்மை மக்களின் உரிமை ஆகியவற்றை நான் நம்புகிறேன். தனிநபர் சுதந்திரம் மற்றும் சிறுபான்மையின ரின் உரிமைகள் ஆகியவற்றைக் காப்பது பெரும்பான்மை யின் ஆதரவைச் சார்ந்துள்ளது. இவற்றிற்கு எந்த பாதிப்பும் வராது என உறுதி செய்வது பெரும்பான்மையின் கடமை.

– அமார்த்யா சென்

தெருவில் போகின்ற சனியன்களில் எந்தச் சனியனை மேலானது என வக்காலத்து வாங்குவது? மத அடிப்படைவாதி கள் விரிக்கும் வலையின் பின்னர் பொதிந்துள்ள அரசியல் நுணுக்கமானது! வெளிப்படையாகத் தெரியாது. இலக்கியம் படிக்கின்ற அல்லது படைக்கின்ற ஒருவரால் எந்த மதத்திற் கும் ஆதரவாகப் பேச முடியாது. டொமினிக் லெப்பியர், லரி கொலின்ஸ் ஆங்கிலத்தில் எழுதியுள்ள Freedom at Midnight தமிழில் நள்ளிரவில் சுதந்திரம் என்ற பெயரில் அலைகள் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த நூலினை அவசியம் வாசிக்க வேண்டுகிறேன். 1947–இல் இந்தியா–பாகிஸ்தான் என இரு நாடுகள் தோன்றின எனப் பேச்சைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் இந்தியாவி லிருந்து பாகிஸ்தான் பிரிந்தது என்ற பொய் காரணமாகக் கொலை செய்யப்பட்ட இந்து, முஸ்லிம், சீக்கிய மதத்தை சார்ந் தவர்களின் எண்ணிக்கை 5,00,000! பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 3,00,000! இரு நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 1,05,00,000. சேதப்படுத்தப்பட்ட, சூறையாடப்பட்ட சொத்துகளின் மதிப்பு பல்லாயிரம் கோடிகளில். நாட்டுப் பிரிவினை என்ற பெயரில் பாலியல் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை உலக அளவில் அதிகம் இங்குதான். கீழைநாடு கள் பண்பாட்டில் மேலானவை என்ற கருத்து 1947–இல் சித றிப்போனது. மீண்டும் ஒருமுறை அன்றைய கொடுமைகளை அரங்கேற்றுவதுதான் இன்று மத அடிப்படைவாதிகளின் முதன்மை நோக்கமாக உள்ளது. முகநூலில் அவ்வப்போது வெளியிடப்படும் மதம் தொடர்பான கருத்துக்களை வாசிக்க கையில் நள்ளிரவில் சுதந்திரம் நூலின் பக்கங்கள் என் கண் முன்னர் விரிகின்றன.

– ந.முருகேசபாண்டியன்

மிக அதிகச் சந்தடி காதைச் செவிடுபடுத்துகிறது. மிக அதி கத் தூரமோ, மிக அதிகச் சமீபமோ நம் பார்வையை மறைக் கிறது. மிக அதிகமான அல்லது மிகச் சுருக்கமான பேச்சு, அறிவை வளராது தடுக்கிறது. மிக அதிக உண்மை நம்மைத் திகைக்க வைக்கிறது.

– பாஸ்கல்

உலகில் தமிழர்கள் மட்டும் தான், தமது பிள்ளைகளுக்கு புதுமையான பெயர்களை சூட்டுகின்றார்கள். "தலைமுறை இடைவெளி" என்று அதற்கு காரணம் கூறுகின்றார்கள். அதா வது, தாத்தா காலத்தில் சூட்டப்பட்ட பெயர்கள் வேறு. தந்தை யின் காலத்தில் சூட்டப்பட்ட பெயர்கள் வேறு. மூன்றாவது தலை முறைக்கும் அதே பெயர்களை சூட்டக்கூடாது என்று பிழவாத மாக இருக்கிறார்கள். இது தமிழர்களின் தாழ்வுச் சிக்கல். உலகில் மற்ற இனத்தவர்கள், தமது முன்னோர்கள் காலங் காலமாக வைத்து வரும் பெயர்களை தான் இனிமேல் பிறக் கப போகும் பிள்ளைகளுக்கும் சூட்டுகிறார்கள். சில பெயர்கள் ஆயிரம் ஆண்டு காலப் பழமையானவை. இதனால், குறிப் பிட்ட ஒருவரின் பெயரை வைத்தே, அவரது இனத்தை, அல்லது தாய் மொழியை அடையாளம் கண்டுபிடித்து விடலாம். தலை முறைக்கு ஒரு பெயர் வைப்பதன் மூலம்; இந்தத் தமிழர்கள் தாமாகவே தமது இன அடையாளத்தை துறக்கின்றனர். இப்படியே போனால், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் ஐந்தாவது தலைமுறையினருக்கு, அவர்களின் பூர்வீகம் தெரி யாமலே போகலாம். ஏனெனில், தாயகத்திலாவது இன்னமும் தமிழ்மொழியை பேசும் மக்கள் வாழ்கின்றனர். புலம்பெயர்ந்த நாடுகளில் அடுத்த தலைமுறையினர் தமிழ் மொழியை பேச மறந்தாலும், பெயர்களையாவது காப்பாற்றி வைத்திருக்கக் கூடாதா?


– கலையரசன்




# அச்சம்



கி.திவ்யன் - தரம்-2
(யா/அச்சுவேலி ம.வி)



ஒரு மடத்தில் துறவி ஒருவர் இருந்தார். நிறைய சீடர்கள் அவரிடம் கல்விகற்று வந்தனர். சீடர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த அவர் எல்லாத் தீமைகளுக்கும் அச்சம் தான் அடிப்படைக் காரணம் அச்சத்தால் வெறுப்புவருகிறது பகை ஏற்படுகிறது பேராசை உண்டாகிறது அதனால்நாம் எந்தச் சூழலிலும் அச்சப்படக்கூடாது என்றார்.

குறுக்கிட்ட சீடர்ஒருவர் ஐயா! அச்சத்தால் பேராசை உண்டாகும் என்கிறீர்கள். இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றார். அதற்கு அவர்பதில் ஏதும் சொல்லவில்லை.

அன்றிரவு வழக்கம் போலத்துறவியும் சீடர்களும் உணவு உண்ண அமர்ந்தனர். அப்போதுதுறவியிடம் வந்த சமையல்காரர் .மடத்தில் அரிசி தீர்ந்து விட்டதை நான் கவனிக்கவில்லை. இருந்த அரிசியை வைத்து இரவு சமையலை முடித்து விட்டேன்.

நாளை நகரத்திற்குச்சென்று அரிசிவாங்கி வந்தால் தான் சமையல் செய்யமுடியும். நண்பகலில் தான் உணவு தயாராகும். காலை உணவு சமைக்கவழி இல்லை என்றார்.

பிறகு அவர்எல்லாருக்கும் உணவு பரிமாறினார். துறவியும் சீடர்களும் உண்டு முடிததனர். சீடர்களைப் பார்த்து துறவி இன்று நீங்கள் அனைவரும் வழக்கத்தை விட அதிகமாகச் சாப்பிட்டு உள்ளீர்கள் ஏன்? என்றுகேட்டார். நாளை காலையில் உணவு கிடையாது என்று சமையல்காரர் சொன்னார். காலையில் பட்டினி கிடக்க வேண்டியிருக்கும். அதனால் இப்போது அதிகமாகச் சாப்பிட்டு விட்டோம் என்றார் சீடர்களில் ஒருவன்.

நாளை காலையில் உணவு கிடைக்காது என்று அச்சம் கொண்டீர்கள். அதனால் வழக்கத்தைவிட அதிகமாகச் சாப்பிட்டீர்கள். அச்சத்தால் பேராசை வரும் என்பதை இப்போது புரிந்துகொண்டிருப்பீர்கள் அல்லவா? என்றார் துறவி.

# குண்டான குழந்தைகளுக்கு இதயநோய் ஆபத்து



2 முதல் 12 வயதுக்குள் குழந்தைகள் அதிக உடல் எடையுடன் இருந்தால் அவர்களுக்கு இதயம் தொடர்பான நோய்கள் வர அதிக வாய்ப்பு உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அதிக உடல் எடை உள்ள குழந்தைகளை பரிசோதனை செய்து பார்த்ததில் அவர்களில் 62 சதவீதம் பேருக்கு மிக மோசமான இதயம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளதாக ஆய்வு குறிப்பிட்டுள்ளது.



*சிறுவர் திறன் விருத்திக்காக தினமுரசு முன்னெடுக்கும் சிறுவர் முரசு ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் உங்கள் அறிவியலிற்கு விருந்தளிக்கும். இச் சிறுவர் முரசில் உங்கள் ஆக்கங்களும் பிரசுரமாக வேண்டுமெனில் சிறுவர் முரசு, தினமுரசு, இல 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சித்திரங்கள் கவிதைகள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.*

# முல்லா தீர்த்த புதிர் உங்களால் தீர்க்க முடியுமா?

கி.பிரணவன்



முல்லா நல்ல அறிவாளி என்றும் எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும் தமது அறிவாற்றலினாலேயே அந்த ஆபத்திலிருந்து தப்பி விடுவார் என்றும் ஊரில் உள்ளவர்களில் பலர் கூறுவது மன்னரின் காதில் விழுந்தது.


அவரது அறிவாற்றலைப் பரிசோதிப்பதற்காக மன்னர்ஒரு நாள் முல்லாவை தமது சபைக்கு வரவழைத்தார். முல்லா வந்து வணங்கி நின்றார். முல்லா உனது அறிவைப் பரிசோதனை செய்ய நினைக்கிறேன், நீங்கள் ஏதேனும் ஒன்றைக் கூறும்,நீர் சொல்வது உண்மையாக இருந்தால் உமது தலை வெட்டப்படும்நீர் சொல்வது பொய்யாக இருந்தால் நீர் தூக்கில் ஏற்றப்படுவீர் என்றார் மன்னன். முல்லா உண்மை சொன்னாலும் பொய்யைச்சொன்னாலும் அவர் உயிருக்கு ஆபத்து தயாராக இருக்கிறது.

முல்லாநிலமையை எவ்வாறு சமளிக்கபோகிறர்என்று சபையோர் அவரையேகவனித்தனர். முல்லா எதைக் கூறி தப்பியிருப்பார்? முல்லா மன்னனை நோக்கி மன்னர் அவர்களே தாங்கள் என்னை தூக்கில் போடபோகிறீர்கள் என்று பதற்றம் ஏதுமின்றிக் கூறினார். அதைக் கேட்ட மன்னர்திகைப் படைந்தார்.

முல்லா சொன்னது உண்மையானால் அவருடையதலை வெட்டப்பட வேண்டும் அவ்வாறு வெட்டப்பட்டால் அவர் கூறியது பொய்யாகிவிடும். முல்லா கூறியது பொய் என்று வைத்துக் கொண்டால் முல்லாவைத் தூக்கில் போடவேண்டும். தூக்கில் போட்டால் அவர் கூறியது உண்மை என்று ஆகிவிடும். உண்மைஎனக் கருதினால் அவரைத் தூக்கில் போடாமல் கழுத்தை வெட்டவேண்டும்.

இப்படி ஒரு குழப்பத்தை தமது அறிவாற்றலால் தோற்றுவித்து முல்லா மன்னனைத் திக்குமுக்காடச்செய்து விட்டார். அவரது அறிவாற்றலைக் கண்ட மன்னன் மிகவும் மகிழ்ச்சியடைந்து பொன்னையும் பொருளையும் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

# வன்முறைவேண்டாம் வளரும் பருவத்திலேயே!




# உங்கள் நண்பன் எண்ணிய எண்ணை கூற வியப்பூட்டும் புதிர்




ஏதாவது ஒரு எண்ணை நினைக்கவும் உ+ம் 5238

அவ் வெண்ணுடன் கடைசியாக பூச்சியத்தை சேர்க்கவும் - 52380

பின் முதல் நினைத்த எண்ணைக் கழிக்கவும் 52380 - 5238 = 47142

அத்துடன் 54 இனை கூட்டவும்- 47142 +54 = 47196

வரும் விடையிலிருந்து பூச்சியத்தை தவிர ஏதாவது ஓர் எண்ணை நீக்கவும் எஞ்சிய எண்களை கூறச் சொல்லவும் உ+ம் ஆக 7 ஐ நீக்கியிருப்பின் உங்கள் நண்பன் விடையாக 4,1,9,6, என்பார் நீக்கிய எண் 7 என்பதை கண்டுபிடிக்க

விடையாக கூறிய எண்களை கூட்டவும் - 4+1+9+6=20

வந்த விடையை விட கூடிய 9 இன் மடங்கை எடுக்கவும்- இவ் உதாரணத்தில் 27


கூடிய ஒன்பதின் மடங்கிலிருந்து கூட்டிய விடையை கழிக்க நீக்கிய எண் வரும் - 27-20=7

# வழி தவறாத பூனை



நாராயணசாமியின் மனைவி ஒரு பூனை வளர்த்து வந்தாள். அது நாராயணசாமிக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. அதனை எப்படியாவது விரட்டிவிட வேண்டும் என்று நினைத்தார். ஒரு நாள் மனைவிக்குத் தெரியாமல் அந்த பூனையைத் தூக்கி கொண்டு இருபது வீடுகள் தள்ளி விட்டு விட்டு வந்தார். வீட்டிற்கு வந்தால் பூனை வாசலில் நின்று கொண்டிருக்கிறது. அடுத்தநாள் அப்பூனையை அடுத்த தெருவில் விட்டு வந்தார். அன்றும் பூனை அவருக்கு முன்னால் வந்து மாடியில் இருந்து அவரைப் பார்த்துக் கொண்டிருந்தது. வெறுப்படைந்த அவர் அடுத்த நாள் பூனையைக் காரில் ஏற்றிக் கொண்டு வலது புறம், இடது புறம் என்று மாறி மாறி நீண்ட தூரம் சென்று பூனையை விட்டு வந்தார். சிறிது நேரம் கழித்து நாராயணசாமி தன் மனைவிக்கு போன் செய்து கேட்டார், உன் பூனை வீட்டிற்கு வந்து விட்டதா? ஆம் என்று மனைவி சொல்லநாராயணசாமி சொன்னார், போனை பூனையிடம் கொடு...எனக்கு வீட்டிற்கு வர வழி தெரியவில்லை.

# க.பொ.த. (சாதாரண தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்



ஆர்.கே. மேனன்
(B.A,Dip.in.tea,S.L.T.S 2 -II)

## கணிதம்

01. சுருக்குக. $4 + 0.03$

02. $2\sqrt{3}$ ஐ முழுமைச் சேடாகத் தருக.

03. சுருக்குக. $(36)^{1/2}$


04. பெறுமானம் காண்க. $\log_a a^{x+y}$

05. A,B என்பன மூட்டற்ற தொடைகளாயின் $n(A \cap B)$ இன் பெறுமானம் யாது?

06. $5x^2, 3xy$ என்பனவற்றின் பொ.ம.சி காண்க.

07. தீர்க்க. $-5x = 15$

08. X ஐக் காண்க.




09. காரணியாக்குக. $9x^2 - 18x$


10. 1, 2, 2, 3, 3, 3, 4 என்ற ஈட்டுக்களின் ஆகாரம் யாது?

11. $4/\sqrt{2}$ ஐ விகிதமுறு பகுதி எண்ணுடன் தருக.

12. $x = 8, y = 16$ எனின் $x^{\frac{1}{3}} \times y^{\frac{1}{2}}$ இன் பெறுமானம் காண்க.

13. தீர்க்க. $4^x = 1/4$

14. உருவில் காட்டப்பட்டுள்ள தரவுகளை அவதானித்து x ஐக் காண்க.




15. -3 , 1 என்பனவற்றை மூலங்களாகக் கொண்ட இருபடிச் சமன்பாட்டை எழுதுக.

16. $3x + 4y = 5$ என்ற சமன்பாட்டில் வகை குறிக்கப்படும் நேர்கோட்டின் படித்திறன் யாது?

17. 12% ஆண்டுவரி அறவிடும் நகரசபை எல்லைக்குள் அமைந்த கடை ஒன்றிற்கான அமைந்த கடை ஒன்றிக்கிற்கான காலாண்டு வரி ரூபா 1920 எனின் கடையின் ஆண்டுப் பெறுமானம் யாது?


18. $V = \sqrt{2x/y}$ என்ற சூத்திரத்தில் Y யை எழுவாய் ஆக்குக?

19. 1101 அடி இரண்டு எண்ணை அடி பத்து எண்ணாகத் தருக?

20. O எனும் புள்ளியிலிருந்து கிழக்கு நோக்கி 100m சென்ற ஒருவர் அங்கிருந்து 100m தெற்கு நோக்கிச் சென்று P யை அடைகிறார். O இலிருந்து P இன் திசை கோள் யாது?


21. உருவில் ABCDEF ஓர் ஒழுங்கான அறுகோணியும் EDGH ஒரு சதுரமும் ஆகும். $F\hat{H}E$ இன் பருமனைக் கணிக்க.


22. 12, 3 என்பனவற்றின்
(1) பெருக்கல் இடை யாது?
(2) கூட்டல் இடை யாது?




23. ரூபா 2000 இற்கு ஆண்டொன்றுக்கு 8% எளிய வட்டிப்படி 3 ஆண்டுகளுக்கு வட்டி யாது?

24. உருவில் AB வட்டத்தின் மையமாகும். x,Y என்பனவற்றைக் காண்க.




25. உருவில் காட்டப்பட்டுள்ள நாற்பக்கல் ABCD இன் பரப்பளவைக் காண்க.

26. $60\, kmh^{-1}$ கதியில் செல்லும் 100m நீளமான புகையிரதம் 50m நீளமான மேடையை கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

27. 44Cm சுற்றளவுள்ள வட்டத்தின் ஆரையைக் காண்க.

28. x ஒரு நிறையெண்ணாக இருக்க $10 \leq x < 20$ எனின் x இற்குப் பொருத்தமான அதிகுறைந்த பெறுமானம் என்ன? அதி கூடிய பெறுமானம் என்ன?

29. a:b=4:3 , b:c= 5:2 எனின் a:b:c ஐக் காண்க.

30. பொருள் ஒன்றை ரூபா 3400 இற்கு விற்றதால் 15% நட்டம் ஏற்பட்டது. நட்டமாகிப் போன அதே தொகைப் பணத்தை இலாபமாக பெற்று கொள்வதற்கு அப் பொருளை என்ன விலைக்கு விற்றிருக்க வேண்டும்.?

### பகுதி B

(01) i. A,B என்போரிடையே உள்ள பணம் முறையே $1/2 : 1/3$ என்ற விகிதத்தில் உள்ளது. இவ் விகிதத்தை எளிய வடிவில் தருக.


ii. B,C என்போரிடையே உள்ள பணம் முறையே $2/3 : 1/5$ என்ற விகிதத்தில் உள்ளது. இவ் விகிதத்தை எளிய வடிவில் தருக.

iii. A,B,C என்போரிடையே உள்ள பணத்தொகைகளுக்கான சேர்த்தி விகிதத்தை காண்க.

iv. C யை விட B யிடம் ரூபா 4000 அதிகமாக உள்ளது எனின் மூவரிடமும் உள்ள மொத்தப் பணம் எவ்வளவு?

(02) உருவில் உள்ள ஒரு கோளமும் அதன் சுற்றுருளையும் காட்டப்பட்டுள்ளன.

i. சுற்றுருளையின் வளைபரப்பு $1257\frac{1}{7} Cm^2$ எனின் கோளத்தின் மேற்பரப்பளவைக் காண்க.



ii. கோளத்தின் ஆரையைக் காண்க.

iii. உருளையின் உயரத்தைக் காண்க.

iv. உருளைக்கு மூடியிட வேண்டுமெனில் தேவைப்படும் தகட்டின் அதிகுறைந்த பரப்பளவு என்ன?


v. 10Cm ஆரையுள்ள அரைகோளத் திண்மத்தின் மேற்பரப்பளவை காண்க.

03) $\mathcal{E}$, A,B என்பன முறையே அகிலத்தெடையையும் A,B என்னும் இரு தொடைகளையும் குறிக்கிறது.

i. $A \subset B$ ஆயின் தரப்பட்டுள்ள அகிலத் தொடையைக் குறிக்கும். வென்வரிப்படத்தில் A,B யை வரைந்து காட்டுக.

ii. $A' \cap B$ குறிக்கும் பிரதேசத்தை நிழற்றுக.

iii. $n(A \cap C) = 0$ ஆயிருக்க $B \cap C$ ஆனது சூனியத்தொடை அன்று எனின் தொடை C யை வென்னுருவில் பொருத்தமான வகையில் சேர்க்க.




iv. B∩C குறிக்கும் பிரசேத்தை நிழற்றுக.

v. உருவில் நிழற்றிய பகுதியை தொடைக் குறியீட்டில் தருக.

(04) குறித்த ஒரு பாடசாலையில் தரம் 06 இல் மாணவரைச் சேர்ப்பதற்கான பரீட்சை ஒன்றில் 150 மாணவர்கள் தோற்றினர். அவர்கள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திரள் | மாணவர் எண்ணிக்கை | திரள் மீடிறன் |
|---|---|---|
| 0 - 10 | 12 | |
| 10 - 20 | 15 | |
| 20 - 30 | 17 | |
| 30 - 40 | 18 | |
| 40 - 50 | 21 | |
| 50 - 60 | 20 | |
| 60 - 70 | 16 | |
| 70 - 80 | 14 | |
| 80 - 90 | 12 | |
| 90 - 100 | | 5 |

i. திரள் மீடிறன் நிரலைப் பூர்த்தி செய்க.

ii. திரள் மீடிறன் வளையியை வரைக.

iii. 50 பேர் மட்டும் தரம் 06 இல் அனுமதி பெறக் கூடியவாறு வெட்டுப்புள்ளியை தீர்மானிக்க.

(05) 1, 1, 2, 3, 3, 3 என இலக்கமிடப்பட்ட சதுரமுகித் தாயக்கட்டை யொன்று இரண்டு தடவைகள் எறியப்பட்டது.

i. மாதிரி வெளியைத் தெக்காட்டின் தளத்தில் காட்டுக.

ii. இரண்டு தடவைகளும் இரட்டை எண் தோன்றும் நிகழ்வுகளைக் கட்டமிட்டு A எனக்குறிக்க. P(A) ஐக் காண்க.

iii. பேறுகளின் கூட்டுத் தொகை 06 ஆக இருக்கும் நிகழ்வுகளைக் கட்டமிட்டு B எனக்குறிக்க.

iv. A யும் B யும் தம்முள் புறநீங்கலானவையா?

v. P(A∪B) ஐக் காண்க?

♦ கணிதம் **II** ஆனது **A,B** எனும் இரு பகுதிகளை கொண்டது.
♦ பகுதி **A** யில் 5 வினாக்களுக்கும் பகுதி **B** யில் 5 வினாக்களுக்குமாக 10 வினாக்களுக்கு விடையளிக்க.

## பகுதி A

(01) ரூபா 90,000 ஐ வைத்திருக்கும் ஒருவர் அதில் ஒரு பகுதியை 8% பங்குலாபம் வழங்கும் 10 ரூபாய் பங்குகளில் 12 ரூபாப்படி மீதியை 6% பங்குலாபம் வழங்கும் 20 ரூபாய் பங்குகளில் 15 ரூபாப்படியும் முதலீடு செய்தார். இதனால் அவருக்கு கிடைத்த மொத்த வருமானம் ரூபா 6,400 ஆகும்.

Y

i. 8% பங்குகளில் முதலீடு செய்து ரூபா X எனில் 6% பங்குகளில் முதலீடு செய்த தொகையை X இன் சார்பில் தருக?

ii. 8% பங்குகளினால் கிடைக்கும் வருமானத்தை X இன் சார்பில் தருக?

iii. 6% பங்குகளினால் கிடைக்கும் வருமானத்தை X இல் காண்க.

iv, X இல் ஒரு சமன்பாடு அமைக்க.

V. (1) 8% பங்குகளில் முதலீடு செய்த தொகை எவ்வளவு?

(2) 6% பங்குகளில் முதலீடு செய்த தொகை எவ்வுளவு?

(02) a. i. 4, 7, 10, 13, 16,.........................என்ற கூட்டல் விருத்தியின் 50 ஆம் உறுப்பைக் காண்க? ii. முதல் 50 உறுப்பக்களின் கூட்டுத்தெகையைக் காண்க.

b. பெருக்கல் விருத்தி ஒன்றின் (n+1) ஆம் உறுப்பு 32 உம் (n+2) ஆம் உறுப்பு 128 உம் ஆகும். i. அதன் பொது விகிதத்தை காண்க?
ii. தொடரின் n ஆம் உறுப்பை காண்க.

(03) i. lga - lgb = x எனின்

$lg\,{a^3}/{b^3}$ இன் பெறுமானத்தைக் X இல் தருக?

$$\frac{\sqrt{245.5 \times 0.6738^3}}{4.007}$$

ii. மடக்கை அட்டவனையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.

(04) i. சுருக்குக. $\dfrac{a^2b^2 + 3ab}{4a^2 - 1} \div \dfrac{ab + 3}{2a \div 1}$

ii. $2x^2 + 5x + 1 = 0$ ஐ வர்க்க பூர்த்தி மூலம் தீர்க்க.

iii. $(a+b)^3 = a^3 + 3a^2b + 3ab^2 + b^3$ என்பதனை பயன்படுத்தி $(x + {1}/{x})^3$ ஐக் காண்க. இதிலிருந்து $x + {1}/{x} = P$ எனின் $x^3 + {1}/{x^3}$ இன் பெறுமானத்தை P இன் சார்பில் காண்க

(05) $y = x^2 - 4x + 5$ இன் வரைபை வரைவதற்காக தயாரிக்கப்பட்ட பூரணமற்ற அட்டவணை தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| X | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| Y | 10 | 5 | 2 | | | | 10 |

a. i. அட்டவனையை பூர்த்தி செய்க.
ii. பொருத்தமான ஆள் கூற்றுத் தளத்தை தயாரித்து $y = x^2 - 4x + 5$ என்ற சார்பினை வரைபுபடுத்துக.


b. i. சார்பின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டைத் தருக?
ii. சார்பின் இழிவுப் பெறுமானம் யாது?
iii. உமது வரைபைப் பயன்படுத்தி $x^2 - 4x + 2 = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வுகளை காண்க.

(06) குறித்த ஒரு வகை பால்மா பக்கற்றுக்களின் விற்பனை தொடர்பாக 100 நாட்களில் சேகரிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு,
நாளொன்றில்

| விற்கப்பட்ட பால்மா பக்கற்றுகளின் எண்ணிக்கை | 40 -50 | 50-60 | 60-70 | 70-80 | 80-90 | 90-100 | 100-110 | 110-120 | 120-130 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 6 | 7 | 9 | 10 | 18 | 17 | 17 | 10 | 6 |

i. ஆகார வகுப்பு யாது?
ii. 100 பால்மா பக்கற்றுக்கு கூடுதலாக எத்தனை நாட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. iii. ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு இடையைக் காண்க.
iv. பால்மா பக்கற்று ஒன்றின் கொள்வனவு விலை ரூபா 100 எனின் அடுத்த 100 நாட்களுக்கு பால்மா பக்கற்றுகளின் முதலீடு செய்வதற்கு ஒதுக்கி வைக்க வேண்டிய பணம் எவ்வளவு?

(07) உருவில் ABCD ஒரு நாற்பக்கல், AB=CD ஆகும். E,F,G,H என்பன முறையே AD, AC, BC, BD என்பனவற்றின் நடுப்புள்ளிகளாகும்.




i. EF, DC என்பனவற்றின் நீளங்களிடையேயான தொடர்பு யாது? காரணம் தருக?
ii. EF=EH என நிறுவுக.
iii. EF//HG என நிறுவுக.
iv. EF=HG என நிறுவுக.
v. EFGH என்ற நாற்பக்கலுக்கு பொருத்தமான சிறப்புப் பெயர் யாது?
vi. EG ⊥ FH என்பதனை உய்த்தறிக.




கைதடி வடக்கு துர்க்கையம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெற்று வருகின்றன. இதில் 6ஆம் நாள் திருவிழாவான விளக்குத்திருவிழாவின் காட்சியையும், மற்றும் 7ஆம்நாள் திருவிழாவான சப்பரத்திருவிழாவின் காட்சியையும் காணலாம்.. (51)

# அரசை ஆட்சேபிக்கும் சந்தர்ப்பமாக தேர்தலை கருதவேண்டும் மக்கள்

## கூறுகிறார் ரணில்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை அரசாங்கத்தை ஆட்சேபிக்கும் சந்தர்ப்பமாக கருத வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலிய நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களின் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கத்தை மாற்றியமைக்கும் தேர்தலாக கருதமுடியாது என்று எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் முசம்மில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கில் தேர்தலில் போட்டியிடும் விதம் குறித்து கண்டனம் தெரிவித்தார்.

அரசாங்கத்திடமிருந்து ஆதரவுகளை பெற்றுக்கொள்ள கூடியளவு வாய்ப்பு இருந்த போதும், தனியாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளார். ஆளும் கட்சியில் ஒரு அங்கத்தவராகவும், அமைச்சராகவும் இருந்து கொண்டு தனித்து போட்டியிட எந்தவித ஒழுக்கரீதியான முறைகளும் இல்லை.

அந்தக் கட்சியின் தலைவர் ரவுப் ஹக்கீம், அரசாங்கத்தில் அமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்னர் தனித்து போட்டியிடுவதில் நியாயம் இருக்கின்றது.

எனவே, வடக்கில் இருக்கின்ற முஸ்லிம் மக்களின் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம், முஸ்லிம் காங்கிரசுக்கு எதிர்ப்பை வெளியிட இந்தத் தருணத்தை பயன்படுத்துங்கள் என்றார்.

# வெள்ளவத்தை பகுதியில் விபசார விடுதி முற்றுகை

வெள்ளவத்தையில் ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த விபச்சார விடுதி முற்றுகை!

கொழும்பு, வெள்ளவத்தை பிரதேசத்தில் ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்று சுற்றி வளைக்கப் பட்டுள்ளது.

இதன்போது குறித்த விபச்சார விடுதியை நடத்திய சந்தேக நபர் ஒருவர் மற்றும் அங்கிருந்த பெண்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண்கள் 25,33,38 வயதானவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நால்வரும் இன்று புதுக்கடை மூன்றாம் இலக்க நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். இச்சமபவம் தொடர்பான மேல திக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# டெங்கு ஆராய்ச்சியில் நனோ தொழில்நுட்பம்

டெங்கு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளில் நனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்த மருத்துவ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனூடாக டெங்குநோய் காரணி எந்தப் பிரிவில் உள்ளடங்குகின்றது என்பதை தெளிவாக அடையாளப் படுத்திக்கொள்ள முடியும் என மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் டொக்டர் அனில் சமரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு வைரஸில் பல்வேறு பிரிவுகள் இருப்பதாகவும் இந்தப் புதிய நனோ விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சியின் மூலம் டெங்கு வைரஸ் கண்டுபிடிக்கப்படுவதுடன் அது எந்தப் பிரிவில் அடங்கும் என்பதை துல்லியமாகக் கணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய நோயாளியின் உடலில் எந்தப்பிரிவு டெங்கு வைரஸின் தாக்கம் ஏற்பட்டுள்ளதென அடையாளம் காண முடிவதுடன் அதற்கேற்ப சிகிச்சை வழங்க முடியும் எனவும் மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முறைப்பாட்டுப் பிரதி வழங்குவதில் எந்தத்தாமதமும் இனி இருக்காது



பொது மக்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு புதிய நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஒருவர் தனது தேசிய அடையாள அட்டையை அல்லது கடவுச் சீட்டை தொலைத்து விட்டால் அதுகுறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து அந்த முறைப்பாட்டின் உத்தியோகபூர்வ நகலை சமர்ப்பித்த பின்னரே புதிய அடையாள அட்டையை அல்லது புதிய கடவுச் சீட்டைக் கேட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

ஆயினும், பொலிஸ் நிலையங்களில் ஒருவர் இத்தகைய முறைப்பாடுகளைச் செய்து அதன் நகலை பெறுவது மிகவும் கடினமான விடயமாக இருந்தது. பலர் ஓரிரு வாரங்கள் வரை கூட இந்த நகல் பிரதியை பெறுவதற்கு காத்திருக்க வேண்டி இருந்தது.

எனவே பொதுமக்களின் இந்தக் கஷ்டத்தைத் தெரிந்து கொண்ட பொலிஸ் மா அதிபர் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு ஆகியவை தொலைந்து விட்டன என்று செய்யப்படும் முறைப்பாடுகளை ஒரு காபன் பிரதியை கீழே வைத்து பொலிஸ் நிலையத்தில் உள்ள உத்தியோகத்தர் எழுதி பின்னர் அதனை தனது உயர் அதிகாரியிடம் காட்டி அவரது அனுமதியுடன் அந்த முறைப்பாடு எழுதப்பட்ட காகிதத்தை அப்புத்தகத்தில் இருந்து கிழித்து எடுத்து சம்பந்தப்பட்ட முறைப்பாட்டுக் காரருக்கு அரை மணித்தியாலத்திற்குள் கொடுப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன் நகல் பிரதி அப்புத்தகத்தில் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும். இதற்கு பொலிஸ் நிலையங்கள் 25 ரூபாவை கட்டணமாக எடுக்கின்றன.

கடந்த சனிக்கிழமை நாரஹேன்பிட பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய இத்தகைய முறைப்பாடு ஒன்று 20 நிமிடங்களில் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பக்கத்து வீட்டுத் தண்ணீரில் பலன் தந்த தென்னங்கன்றுகள்

(திருநெல்வேலி)

பக்கத்து வீட்டுத் தண்ணீர் தாங்கியிலிருந்து அடுத்த வீட்டுக் காணிக்குள் கொட்டிய மேலதிக தண்ணீரை வீணாக்காது அதனைப் பயனுள்ளமுறையில் பயன்படுத்திய வீட்டுக்காரர் பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். தென்மராட்சி சரசாலைப் பகுதியில் தனது வீட்டுக்காணி எல்லையுடன் ஒருவர் அவ்வீட்டுக்கான தண்ணீர்த் தாங்கியைத் கட்டியிருந்தார்.அதற்கு மோட்டார் மூலம் தண்ணீர் நிரப்பும் போது மேலதிகமாக வெளியேறும் நீர் அடுத்த வீட்டுக் காணிக்குள் கொட்டியது. இதனை அவதானித்த அடுத்த வீட்டுக்காரர் தண்ணீர் தாங்கி கட்டிய பக்கத்து வீட்டாரிடம் கூறினால் அவர்களோடுவீணான மனஸ் தாபம் ஏற்படலாம் என எண்ணித் தண்ணீர் கொட்டிய தனது காணிக்குள் சில தென்னங்கன்றுகளை நாட்டினார்.

தற்போது இத் தென்னம்பிள்ளைகள் காய்க்கத் தொடங்கியுள்ளன. இது பற்றி அடுத்த வீட்டுக்காரர் மனமகிழ்ந்துள்ளார்.

பக்கத்து வீட்டுக்காரருடன் மனஸ்தாபம் ஏற்படாமல் தவிர்த்துக் கொண்டதுடன் தானும் பயன்பெற்றுள்ளமை பற்றி அவர் மிகவும் திருப்தி அடைந்துள்ளார். (137)

# சிலாவத்துறை தபாலகத்தை தரமுயர்த்துமாறு கோரிக்கை

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த சிலாவத்துறை தபாலகத்தினை சகல வசதிகளும் கொண்ட நவீன தபாலகமாக தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

இந்தக் கோரிக்கை வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீனினால் தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவுக்கு விடுக்கப்பட்டுள்ளது.இது தொடர்பாக அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவுக்கு அமைச்சர் றிசாத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"தற்போது மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் மீள்குடியேறி வருகின்றனர். இந்த பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 50 வருடம் கொண்ட சிலாவத்துறை தபாலகத்தினை தரமுயர்த்தி, சகல வசதிகளையும் ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் பெரும் நன்மையடைவார்கள்.மறிச்சுக்கட்டி தொடக்கம் உள்ள கிராமங்களில் உள்ள மக்கள் தபால் சேவைகளுக்காக சில சந்தர்ப்பங்களில் 17 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முருங்கன் தபாலகத்துக்கு செல்ல நேரிடுவதாக எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்" என்றார்.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம் புதிய சோனக தெரு J/87 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் அப்துல்கரீம் ஹஸ்ஸான் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக யாழ். மாவட்ட நீதவான் ஏ.ஏ ஆனந்த ராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இணையும் கரங்கள் சனசமூக நிலையம்,கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும்,கிராமிய சிறுவர் உரிமை மேம்பாட்டுக்குழுவின் பொருளாளராகவும்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி கட்டுப் பாட்டுச்சபை,கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுவினதும் மேலும் பல அமைப்புக்களின் உறுப்பினராகவுமுள்ளார்.சிறந்த சமூக சேவையாளரான இவர் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி, மல்வானை தேசிய கல்லூரியின் பழைய மாணவராவார். (105)



# உயரமான விமான நிலையம் திபெத்தில் சீனா அமைப்பு

உலகின் மிக உயரமான இடத்தில் சீனா விமான நிலையத்தை அமைத்து வருகிறது.

கட்டுமான பணியில் சீனா, உலகின் முதலிடத்தை வகித்து வருகிறது. திபெத்தை தனி நாடாக அறிவிக்கக்கோரி, புத்த மதத்தலைவர் தலாய் லாமா தலைமையில் நீண்ட நாட்களாக போராட்டம் நடக்கிறது.

சீன அரசை எதிர்த்து நூற்றுக்கும் அதிகமான புத்த துறவிகள், திபெத் விடுதலைக்காக தீக்குளித்து உயிர் துறந்துள்ளனர்.

இதேவேளை திபெத்தில் கடல் மட்டத்திலிருந்து, 4,411 மீற்றர் உயரத்தில் டாவோசெங் யாடிங் என்ற இடத்தில், விமான நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

விரைவில் பணிகள் முடிய உள்ள. இந்த விமான நிலையம், உலகின் மிக உயரமான இடத்திலுள்ள விமான நிலையமாகக் கருதப்படும் ஏற்கனவே, திபெத்தில், லாசா, காங்கர், பாங்டா, ஜிகாஸ், என்காரி ஆகிய ஐந்து இடங்களில், விமான நிலையம் உள்ளது. இதில் பாங்டா விமான நிலையம் தற்போது உலகின் மிக உயரமான இடத்தில் உள்ள விமான நிலையமாகக் கருதப் படுகிறது.

இந்த விமான நிலையம் கடல் மட்டத்திலிருந்து, 4,334 மீற்றர் உயரத்தில் உள்ளது.

உலகச் செய்திகள்



ஈரானில் புதிய அதிபர் பதவியேற்பு விழா தெஹ்ரானில் உள்ள நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் புதிய அதிபர் ஹசன் ரோஹானி தலைமை நீதிபதி முன் உறுதிமொழி ஏற்றார்.

# தலையே போனாலும் சரி ஐதராபாத்தை விடமாட்டேன்



ஐதராபாத், ஆந்திர மாநிலத்தை இரண்டாக பிரித்து தெலுங்கானா மாநிலம் உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஆந்திரா, தெலுங்கானா இரு மாநிலங்களுக்கும் ஐதராபாத்தை 10 ஆண்டு களுக்கு பொதுவான தலைநகராக செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிடையே ஐதராபாத் நகரை யூனியன் பிரதேசமாக்க ஆலோசனை நடத்தப்பட்டது. இதற்கு தெலுங்கானா ராஷ்டீரிய சமிதி கட்சித் தலைவர் சந்திர சேகர்ராவ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது, ஐதராபாத் நகரை 10 ஆண்டு களுக்கு பொதுவான தலை நகரமாக வைத்துக் கொள் வதில் எங்களுக்கு எந்த ஆட் சேபனையும் இல்லை. ஆந்திராவில் புதிய தலைநகரை உருவாக்ககால அவகாசம் தேவை என்பதால் அதை ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் ஐதராபாத் நகரை நிரந்தரமாக இரு மாநிலங்க ளுக்கும் பொதுவான தலை நகரமாக ஏற்கமுடியாது. அது போல ஐதராபாத் நகரை யூனியன் பிரதேசம் ஆக்கும் திட்டத்தையும் எங்களால் ஏற்க இயலாது. தலையே போனாலும் ஐதராபாத்தை நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஐதராபாத் நகரம் தெலுங்கானாவுக்கே சொந்தமானது. ஐதராபாத் இல்லாத மாநிலத்தை நினைத்து பார்க்க இயலாது எனத் தெரிவித்துள்ளார்.


# வியட்நாம் விண்ணிற்கு அனுப்பிய மைக்ரோ செயற்கைக்கோள்

வியட்நாம் நாடு சர்வதேச விண்வெளி மையத்தில் ஒரு சிறிய செயற்கைக்கோளை நிறுவி உள்ளதாக நேற்று வெளிவந்த செய்தி தெரிவிக்கிறது. ஜப்பானின் வர்த்தக விண்கலமான குனோடோரி-4ன் மூலமா பிக்கோ டிராகன் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த செயற்கைக் கோளும், அமெரிக்காவின் 3 செயற்கைக்கோள்களும் விண்வெளி மையத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த விண்கலத்தைச் சுமந்து செல்லும் எச்-2பி ராக்கெட் சனிக்கிழமை அன்று விண்ணில் ஏவப்பட்டது. பூமியின் குறைந்த அளவு சுற்றுப்பாதையில் இந்த ராக்கெட் ஐந்து நாட்கள் பயணம் செய்யும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிக்கோ டிராகன் செயற்கைக் கோள், விண்வெளி சுற்றுச்சூழல் விபரங்கள், பூமியின் படங்கள் மற்றும் சோதனை தொடர்பு அமைப்புகள் போன்றவை குறித்த தகவல்கள் சேகரிக்க அனுப்பப்பட்டுள்ளதாக வியட்நாமின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 2041 படிக்கட்டுக்களை 10 நிமிடத்தில் ஏறி சாதனை



சீனாவில் 2041 படிக்கட்டுகளில் ஏறி ஜேர்மனியைச் சேர்ந்த தோமஸ் டோல்டு என்பவர் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்தார்.

இந்தப்போட்டி சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தில் நடந்தது. இந்தக்கட்டடம் சுமார் 82 மாடிகளைக் கொண்டதுடன், இதன் உயரம் 1080 அடியாகும்.

இதில் லிப்ட் தவிர சுமார் 2041 படிக்கட்டுகள் உள்ளன.

இங்குள்ள 82 மாடிக்கு 2041 படிக்கட்டுகள் மூலம் ஓடும் போட்டி சமீபத்தில் நடந்தபோது இதில், சுமார் 600 பேர் கலந்து கொண்டனர்.

போட்டியில் ஜேர்மனியைச் சேர்ந்த தோமஸ் டோல்டு என்பவர் முதலாவதாக வந்து வெற்றி பெற்றார். தரைத்தளத்தில் இருந்து படிக்கட்டுகள் வழியாக 82 ஆவது மாடியை 10 நிமிடம் 22 வினாடிகளில் இலக்கையடைந்து சாதனை படைத்தார்.

இது குறித்து தோமஸ் டோல்டு கூறுகையில், வினாடிக்கு 3 முதல் 4 படிகளில் ஏறியதால்தான் வெற்றிக் கிடைத்தது என்று தெரிவித்துள்ளார்.

# லோக்சபா கூட்டங்களுக்கு சமூகமளிக்காமல் சாதனை

(புதுடில்லி)

இதுவரை நடைபெற்ற லோக் சபா கூட்டங்களில் 50 சதவீதத்திற்கும் குறைவான கூட்டங்களிலேயே காங்கிரஸ் தலைவர்கள் சோனியாவும், துணைத் தலைவர் ராகுலும் பங்கேற்றுள்ளனர்.

மொத்தமுள்ள 545 லோக் சபா உறுப்பினர்களில் 92 இற்கும் அதிகமான உறுப்பினர்கள் பெரும்பாலான கூட்டங்களில் பங்கேற்காது தவிர்த்துள்ளனர்.



15 ஆவது லோக்சபாவின் மழைக்கால கூட்டத்தொடர் நடப்பு ஆட்சியின் கடைசி மழைக்கால கூட்டத்தொடர் இதுவாகும்.

இதற்கு முன் நடைபெற்ற 314 கூட்டங்களில் 135 இல் மட்டுமே சோனியாவும் ராகுலும் பங்கேற்றுள்ளனர்.

இத்தகவல் லோக்சபா இணையதளத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த இணையத் தளத்தில் லோக்சபா கூட்டங்களில் பங்கேற்ற உறுப்பினர்கள் குறித்த விபரம் தெரி விக்கப். பட்டுள்ளது.

உறுப்பினர்களில் வருகை பதிவில் காங்கிரஸ் தலைவர் ராகுல தான மிக குறைநதளவில் உள்ளார். இணையத்தள விபரத்தின் படி சோனியா 48 சதவீதம் வருகை பதிவும், ராகுல் 43 சதவீத மும், பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி 82 சதவீதமும், ராஜ்நாத் சிங் 80 சதவீதமும் பெற்றுள்ளனர்.

முக்கிய தலைவர்களை விட முதல்வரிசை உறுப்பினர்கள் அதிகளவிலான வருகைப் பதிவுகளை பெற்றுள்ளனர். ஐக்கிய ஜனதாதள் கட்சித் தலைவர் சரத் யாதவ் 83 சதவீதம், சமாஜ் வாதி கட்சி தலைவர் முலாயம் சிங் 86 சதவீதம், ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சி தலைவர் லாலு பிரசாத் 79 சதவீதம், பாஷுதீப் ஆச்சாரியா 90 சத வீதம், தாரா சிங் 93 சதவீதம், தேவகவுடா 66 சதவீதம் வருகை பதிவை கொண்டுள்ளனர்.

# புகைப்பழக்கத்தை ஒழிக்க பேசும் சிகரெட் பெட்டி

(லண்டன்)

சிகரெட் பெட்டியைத் திறந்தாலே அது, உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் என்ற வாசகத்தை புகைப்பவர்கள் கேட்கும் வகையிலான, பேசும் சிகரெட் பெட்டிகள் பிரிட்டனில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வாசகம் லண்டனை சேர்ந்த, ஸ்டர்லிங் பல்கலைக் கழகத்தின், புகையிலை கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மைய ஆய்வாளர்கள் தான், இந்த பேசும் சிகரெட் பெட்டிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதில் சிகரெட் பிடித்தால் உடல்நலத்திற்கு தீங்கானது என்ற வாசகம் மட்டுமின்றி, புகைபிடித்தால், மலட்டுத் தன்மை ஏற்படும் என்பது போனற வாசகங்களும் இதில் இடம்பெறறுள்ளன. சிகரெட் பெட்டிகளில் இடம்பெற்றுள்ள தொலைபேசி எணகளை புகைப்பவர் சுழற்றும் பட்சத்தில், புகைப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து, மறுமுனையில் பேசுபவர் விளக்குவார்.

இந்தச் சிகரெட் பெட்டி விற்பனைக்கு வந்தால், அது, புகைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு, ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என, இதனை வடிவமைத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில், இளம் பெண்களில் ஏராளமானோர், புகைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

இதனால், 16 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்களிடம் இதுகுறித்த ஆய்வு சமீபத்தில் நடைபெற்றது.

புகைக்கு அடிமையான பெணகளை, இந்த இழிபழக்கத்திலிருந்து மீட்கும் வகையில், சிகரெட்டை தயாரிக்கும் நிறுவனங்களே, சிகரெட் பெட்டிகளை மிகவும் கவர்ச்சிகரமாகவும், ஒவ்வொரு முறையும், சிகரெட் பெட்டியைத் திறக்கும்போது, வாசகங்கள் கேட்கும் வகையிலும், இவற்றை தயாரித்துள்ளன.

# யாழில் நடமாடும் மருத்துவ முகாம்; அமெரிக்க விமானப்படை அனுசரணை






(யாழ்ப்பாணம்)

பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க விமானப்படையினர் மற்றும் பங்களாதேஷ் மாலை தீவுப் படையினருடன் இலங்கையின் முப்படையினரும் இணைந்து நடமாடும் மருத்துவ சேவை முகாமொன்ற யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்திவருவதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைகளத்துடன் இணைந்து இந்த மருத்து முகாமிற்கு அனுசரணை வழங்கிவருவதுடன் முதலாவது நடமாமும் மருத்துவ முகாம் திக்கத்தில் உள்ள கலாசார மணடபத்தில் நேற்று நடைபெற்று இன்றும் இரண்டாவது நாளாக நடைபெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 10 ஆம் திகதிகளில் அச்செழு மகாவித்தியாலத்திலும் இந்த மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் அந்தந்தப் பகுதி மக்கக்கு கண் சிகிச்சை, பற்சிகிச்சை, தோற்சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை, பொதுவைத்திய சேவைகள் பலவும் இலவசமாக வழங்கபபடுகிறது.

இதில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வெளிநாட்டு வைத்தியர்களும் அவர்களுடன் இணைந்து தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களும் யாழ் செஞ்சிலுவைத் தொண்டர்களும் பங்குபற்றுகின்றனர்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை அந்தந்தப் பகுதி பொதுமக்களும், நோயாளர்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு இலங்கைச் செஞ்சிலுவை யாழ். கிளை கேட்டுக்கொண்டுள்ளது. (பா)

### பிரிவினையை...

பெறமுடியாதுபோன பிரிவினையை அரசியல் பலத்தின் மூலம் செய்ய அவர்கள் திட்டமிடுகின்றனர். எமது மக்கள் உயிர்த்தியாகம் செய்து பாதுகாத்த நாட்டை மீண்டும் துண்டுபோடுவதற்கு அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது.

வடமாகாணத்திற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கி முப்பது வருடம் யுத்தம் செய்து ஆயுதத்தால் பெறமுடியாது போன பிரிவினையை மீண்டும் அரசியல் வடிவில் கொண்டு வர அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.

அதேபோன்று ஜனாதிபதியும் அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டார். மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் எமக்கு எவ்வித சவாலும் இல்லை. நாங்கள் வெற்றிப் பாதையிலேயே சென்றுகொண்டுள்ளோம். எதிர்க்கட்சி என்று ஒன்று இன்றில்லை. பரவலாக மாகாண சபைத் தேர்தல்களில்தான் வாக்குகள் மிகவும் குறைவாக பாவிப்பது. எனவே இம்முறை வாக்களிப்பவர் களின் எண்ணிக்கையை 65-70 சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

### இரண்டுநாள்...

வுள்ளார். அங்கு பொதுமண்டபம், ஏலவிற்பனை நிலையம் என்பவற்றையும் திறந்துவைக்கவுள்ளார்.

அதன் பின்னர் மறுநாள் நெடுந்தீவு செல்லும் அமைச்சர் அங்கு நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இழைப்பாறு மண்டபம் ஏலவிற்பனை நிலையம் என்பனவற்றைத் திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் அன்றையதினம் பிற்பகல் கிளிநொச்சி செல்லும் அவர அங்கும் பல நிகழ்வுகளில் கலந்துகொள்வதுடன் மறுநாள் 12 ஆம் திகதி மன்னாரிற்கும் விஜயம் செய்யவுள்ளதாக உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (பா)

### வெலிவேரி...

கொண்டனர். இதன்போது "பொய்யான கதைகள் வேண்டாம்", "மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்று", "குடிநீர் கேட்ட மக்களுக்கு துப்பாக்கிச் சூடு", "உரிமைக்காக ஒன்றிணைவோம்", "மக்களின் பிரச்சினைகளுக்கு அரசிடம் தீர்வு இல்லை" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### ஜனாதிபதியின்...

பணியாற்றி இறுதியில் சுடரொளியில் ஆசிரியராகப் பணியாற்றி இருந்தார்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் பேரவை மற்றும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் என்பவற்றின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கும் சிவராஜா இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் ஏன்பது குறிப்பிடத்தக்கது.

### பொதுநலவாய...

மேற்கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். மேற்படி சந்திப்பு யாழ். கீறின் கிறாஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணியில் பங்கெடுக்கும் பங்காளிக் கட்சியான ஈ.பி.டி.பியின் முதன்மை வேட்பாளர் சின்னத்துரை தவராசா கருத்துத் தெரிவிக்கையில், நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தல் நீதியாகவும். நியாயமாகவும், உண்மையாகவும் நடைபெற வேண்டுமெனவும் அதற்கு தாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். இதன்போது 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் தேர்தல் மோசடிகள இடம்பெற்றுள்ளது எனச் சுட்டிக்காட்டிய அவர், 2009 இற்குப் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல், ஆகியன நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்றன. இதற்கு தேர்தல் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை சான்று பகிர்கின்றன.

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதே தமது விருப்பமெனத் தெரிவித்த அவர் அதற்குத் தாம் முழுமையான பங்களிப்பை வழங்கத் தயார என்றும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் நடவடிக்கையின் போது பிரசார நடவடிக்கை, வாக்குப்பெட்டி எண்ணும் இடம், வாக்களிக்கும் முறைமைகள் பற்றி வேட்பாளர்கள் பொதுநலவாய தேர்தல் செயலக பிரதிநிதிகளுக்கு விளககமளித்தனர்.

இந்தச் சந்திப்பில் பொதுநலவாய நாடுகளின் ஜனநாயக விடயங்களுக்கான தலைமை ஆலோசகர் மார்டின் கெசிர்ய (Martin Kasirye) மற்றும் ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான செயலாளர் அமனா ஜடடோய் (Amna Jatoi) ஆகியோருடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, ஐ.ம.சு.முன்னணியின் சார்பில் போட்டியிடும் ஈ.பி.டி.பி வேட்பாளர்களான சுந்தரம் டிவகலாலா, கோடிஸ்வரன் றுஷாங்கன், ஞானசக்தி சிறிதரன் உட்பட ஏனைய வேட்பாளர்களும் உடனிருந்தனர்.




## வெலிவேரியவிற்கு இராணுவத்தினர் எனது பணிப்பிலேயே சென்றனர்

### என்கிறார் பொதுபலசேனா பொதுச்செயலர்

தனது பணிப்புரைக்கு அமையவே வெலிவேரிய கலகம் இடம்பெற்ற பகுதிக்கு இராணுவத்தினரை பாதுகாப்பு அமைச்சு அனுப்பி வைத்ததாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். வெலிவேரியாவில் இடம்பெற்ற போராட்டத்தை அவதானித்து, படையினரை அனுப்பி வைக்குமாறு தாம் கோரிக்கை விடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார.

கிராம மக்களின் கோரிக்கை நியாயமானது என்ற போதிலும் போராட்டத்தில் குழப்பம் ஏற்படக் கூடுமென்ற அச்சம் காரணமாகவே இவ்வாறு படையினரை அனுப்பிவைக்குமாறு தாம் கோரிக்கை விடுத்ததாகத் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட சிலர் கிராம மக்களை பிழையாக வழிநடத்தியதனை தாம் அவதானித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆர்ப்பாட்டத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்பது பற்றிய சரியான

வழிகாட்டல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குழப்பங்கள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்பு அமைச்சைத் தொடர்புகொண்டு படையினரை சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாம் கோரிய்தாகத் தெரிவித்துள்ளார்.

கிராம மக்கள் அமைதியான முறையில் நடந்து கொண்டிருந்தால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்காது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இராணுவப் படையினரை மக்கள் ஆத்திரமூட்டிய தாகவும் ஒட்டுமொத்த சம்பவத்திற்கும் இராணுவத்தினரை குற்றம் சுமத்த முடியாது எனவும் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

## வீரப்பமொய்லி இலங்கை வருகிறார்

இந்திய பெற்றோலிய வளத்துறை அமைச்சர் வீரப்பமொய்லி இலங்கைவரவுள்ளார். இலங்கைவரவுள்ள அவர், மன்னாருக் கான விஜயம் ஒன்றை மேற் கொள்ளவுள்ளார். இந்த விஜயத்தின் போது, இலங்கை அரசாங்கத்துடன், வாயுவினைபெறுவது குறித்து பேச்சு வார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் உரிய முறையில், அமுல்படுத்தப்படும் பட்சத்தில், அதற்குப் பதிலாக இந்தியாவில் இருந்து பொருட்கள் மற்றும் சேவைகளை வாயுவிற்கு மாற்றாக வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கூட்டமைப்பு...

வர்த்தகரான இவர் கனடாவில் குடியேறி அங்கு குடியுரிமை பெற்றுக்கொண்டார். பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய மற்றும் குறித்த கட்சியின் தலைவர் ஆகியோரின் அனுசரணையுடன் இலங்கை, கனடா இரட்டை குடியுரிமையையும் பெற்றுக்கொண்டார்.

குறித்த வியாபாரி பணத்தை அள்ளி வீசியதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்துள்ளார். இவர் 50 இலட்சம் கொடுத்தது மட்டுமன்றி தனது தேர்தல் பிரசாரத்திற்காக ஒரு கோடியை செலவழிக்க இருப்பதாகவும் கூறிவருகிறார் என அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

### குடிநீர்ப்பிரச்சினைக்கு...

மக்களுக்கு தெளிவாக புரிய ஆரம்பித்துவிட்டன.

இதனை ஐக்கிய தேசியக் கட்சிமிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதற்குரிய விசாரணைகள் இடம்பெற்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் இழப்பீடுகளை வழங்கவேண்டும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் மாவிலாற்றில் இடம்பெற்ற குடிநீர்ப் பிரச்சினைக்காக விடுதலைப் புலிகளுடன் இராணுவத்தினர் யுத்தத்தில் ஈடுபட்டு அம் மக்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுத்தனர். இன்று குடிநீருக்கு தீர்வுகேட்டு வீதியில் இறங்கிப் போராடிய மக்களுக்கு அந்த இராணுவம் துப்பாக்கியால் தீர்வினை வழங்கியுள்ளது.

அரசாங்கம் மக்களின் உயிர்களைக் காவுகொண்டு மிலேச்சத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது. நாளுக்கு நாள் வெளிப்படுத்தும் மக்கள் விரோத செயற்பாடுகளால் அரசாங்கத்தின் மறுமுகம் வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளது. தற்போது மக்கள் நெருப்பிற்கு மத்தியில் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெலிவேரிய குடிநீர் பிரச்சினை

## அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்பு)

கம்பஹா வெலிவேரிய பகுதியில் ஏற்பட்ட குடிநீர் பிரச்சினை தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரச நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரத்துபஸ்வல குடிநீர் பிரச்சினை தொடர்பான நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்குமாறு நீர் வழங்கல் சபை, பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட 26 நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய கலந்துரையாடல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட விவகாரங்களுக்கான செயலாளர் நிமல் புஞ்சிஹேவா கருத்து வெளியிடுகையில், அழைக்கப்பட்டிருந்த அனைத்து நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் பிரசன்னமாகி இருந்ததாக தெரிவித்தார். இதன்போது குறித்த அதிகாரிகளுக்கு மூன்று அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

சர்ச்சையை தோற்றுவித்துள்ள தொழிற்சாலையின் செயற்பாடுகளால் நீர் அல்லது மண்ணுடன் கழிவுகள் கலந்துள்ளதா என்பது தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு மனிதஉரிமைகள் ஆணைக குழு அரச நிறுவன பிரதிநிதிகளுக்கு அறிவித்துள்ளது.

எதிர்ப்பு நடவடிக்கையின் போது ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த அமைதியின்மை தொடர்பில் ஆராய்வதற்காக இராணுவக் குழுவொன்றை நியமித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அந்தக் குழுவின் அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு அறிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

# கருடமடுவில் இன்று புனித நீராடல்

இன்று அமாவாசையை முன்னிட்டு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து எம்பெருமான் வீதி உலாவாக கருடமடுவைச் சென்று அங்கு புனித தீர்த்தமாடவுள்ளார்.

கருடன் என்ற பறவையினால் சொன்டால் கிழித்து நீர் எடுக்கப்பட்டதாக ஐதீகம் கூறுகிறது. இதனால் அடியார்கள் இநத இடத்தில் தீர்த்தமாடியும், அத்திரட்டிக்கிரிகைகளையும் வன்னிப் பிரதேச மக்கள் இவ்விடத்தில் செய்து வருவது வழக்கம். ஆடி என்பது கடும் கோடையாக இருந்தாலும் இந்த மடுவில் நீர் வற்றுவதில்லை இதற்கு வரலாற்றுக்கதையும் உண்டு. மூதாதையர் காலத்தில் இந்த மாவட்டத்தில் இருந்து இது போன்று கிரிகைகளை செய்வதற்கு அந்தக் காலத்தில் கீரிமலைக்குச் சென்று வருவது வழக்கம்.

கீரிமலைக்குச் செல்லமுடியாத சூழ் நிலை பின்னர் ஏற்பட்ட போது சிவபெருமானால் கருடன் என்ற பறவையினால் இத்தீத்தக் கேணி உருவாக்கப்பட்டதாக கூறும் புராணக்கதையை நம்பும் இப்பகுதி மக்கள் வருடம் தோறும் இவ்விடத்திலே தங்கள் கிரியைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## கடலென நின்ற கண்ணீர்த் துளிகள் ...

எமது நிறுவனத்தில்
கணனி வடிவமைப்பாளராக பணிபுரிந்த
அமரர்
**கனகசபாபதி சபாநாதன்**
(நாதன்)

தோற்றம்
19.06.1981

மறைவு
04.08.2013

*நாதனே.....! எம்நடுவிலே நின்று நாளும்*
*சேவையால், மனது கொண்ட நேசனே ....*
*ஏது நாம் சொல்வோம் நாதா,*
*ஏங்கிடப் பொழுது தந்த பாசமே ....*

*ஓடலை எம்முள் ஒன்றும், ஒப்பிலான் தன்னை விட்டோம் - நீ*
*கணினியின் முன்னால் நின்றால், கதை பல பேசும் கைகள் ... நீ*
*கணனித் திரையதன் முன்னமர்ந்து தீரனே கையசைந்தால்*
*அழகுறும் திரைமலர்ந்து, ஆக்குவாய் கலைத் திறன்கள் .....*

**"மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்"** *ஒளியிழந்து, மாய்ந்து இன்றாய் நீயும்*
*இனியிலை என்று ஆச்சோ ...? இனியனே உன்கைபட்ட*
*கணினியன் கதையும் போச்சோ...? கண்ணனே எம்முள் நிற்கும்*
*ஒருநிலை கெட்டதாச்சோ...? ஓடி நீ சென்றதேனோ....?*

*மனமெலாம் பதைக்குதையா*
*மாண்பனே எம்முள் வாழ்வாய் ....*

*எம் இனிய நண்பனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, எம் அன்பு நண்பனின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கலங்கிய விழிகளுடன்
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் நிறுவனத்தினர்
15/2, முருகேசர் லேன், நல்லூர்.

(C/2557)

# கொள்ளைச் சம்பவம்; சந்தேக நபர் விளக்கமறியலில்

கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு ஒரு மணியளவில் வீடு ஒன்றிற் உட்புகுந்து 167,500 ரூபா பெறுமதியான பவுண் நகைகள், பணம் ஆகியவற்றை கொள்ளையடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளையில், சந்தேக நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்

மேலும் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் இந்நபர் தொடர்புபட்டுள்ளதாகவும் சாட்சிகளுக்கு இடையூறு செய்வார் எனவும், முழுமையான விசாரணை முடியவில்லை எனவும் பொலிசார் மன்றிற்கு தெரிவித்திருந்தனர். அத்துடன் இந்நபர் கைது செய்யப்பட்ட பின் அப்பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் மேலும் இக்கொள்ளைச் சம்பவங்களுக்கு உடந்தையாக உள்ள சிலரை கைது செய்யவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (70)

### காதலிப்பதாகத் தெரிவித்து

# சிறுமியை கர்ப்பமாக்கிய இளைஞனுக்கு விளக்கமறியல்

15 வயதுச் சிறுமியைக் காதலிப்பதாகத் தெரிவித்து அவரை நான்கு மாத கர்ப்பிணியாக்கிய இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த சிறுமியின் தாயார் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த வேளை அயல் வீட்டிலிருந்த இளைஞர் ஒருவரே இக்குற்றச் செயலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞனைக் கைது செய்த பொலிஸார் நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியவேளை அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (170)

# சட்டவிரோத மரக்கடத்தல் குற்றவாளிகளுக்கு தண்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தேராவில் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பகுதிகளில் உள்ள காடுகளுக்குள் உட்புகுந்து சட்டவிரோதமாக 3 இலட்சம் ரூபா பெறுமதியான பாலை, முதிரை மரங்களை வெட்டி கடத்த முற்பட்ட நான்கு பேருக்கு ரூபா 160,000/- தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், மரக்குற்றிகளை அரசுடைமையாக்கி மரக் கூட்டுத்தாபனத்திற்கு பாரப்படுத்துமாறு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு பகுதி காடுகளில் அதிகளவில் சட்டவிரோதமான முறையில் மரக்குற்றிகள் வெட்டப்பட்டுக் கடத்தப்படுவதாக தொடர்சசியாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக வனவள அதிகாரிகளும், பொலிஸாரும் மன்றில் தெரிவித்தனர். (170)

# கிளி.பொதுச்சந்தைக்கு மின்சாரம் துண்டிப்பு

கிளிநொச்சி பொதுச்சந்தைக்கான மின்சார விநியோகம் கடந்த மூன்று தினங்களாக முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கிறது. இதனால் சந்தைப்பகுதிக்கான நீர் விநியோகமும் மேற்கொள்ளப்படாமல் பெரும் சுகாதாரச் சீர்கேடு தலை தூக்கியுள்ளது.

கரைச்சிப் பிரதேசசபையின் வங்குபோத்து நிலை காரணமாக மின்சார சபைக்குச் செலுத்தவேண்டிய நிலுவைக் கட்டணம் பலமாதங்களாகச் செலுத்தப்ப டவில்லை. இதன் காரணமாக மின்சார விநியோகத்தை மின்சாரசபை துண்டித்து விட்டது. இதனால் இரவு பகலாக இச்சந்தைப்பகுதி மின்னொளி இன்றி இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

இந்தச் சந்தைப்பகுதியில் காணப்படும் பொது மலசல கூடங்கள் நீர் விநியோகம் தடைப்பட்டதால் சுத்தம் செய்யப்படாமல் துர்நாற்றம் எடுக்க ஆரம்பித்துள்ளது.

இது மட்டுமல்லாமல் மின்வெளிச்சம் இன்மையால் இரவு நேரத்தில் சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. (29)

# தாதியர் பயிற்சி நெறியினை தனியார் மயப்படுத்த முயற்சி

## தாதியர் தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தாதியர் பயிற்சி நெறியினை அரசாங்கம் தனியார் மயப்படுத்த முயற்சிப்பதாக அகில இலங்கை தாதியர் தொழிற்சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பாக தொழிற்சங்கத்தின் தலைவர் சமன் ரட்னபிரிய ஊடகங்களுக்குத் தெரிவித்தாவது,

அரச தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் வெளிவாரி மாணவர்களை இணைத்துக்கொள்ள அரச ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள 17 தாதியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் வெளிவாரி மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வகையில் ஒருவார காலத்தில் விண்ணப்பிக்குமாறு இந்த விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

எனினும் வெளிவாரி மாணவர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க ஒருவார கால அவகாசம் போதர்து வெளிவாரி மாணவர்கள் தமது மூன்று வருட படிப்பை நிறைவு செய்ய ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவைச் செலுத்தவேண்டும்.

இவ்வாறு வெளிவாரி மாணவர்கள் தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் இணைக் கப்பட்டால், உள்வாரியாக இணைக்கப்படும் மாணவரின் தொகை மட்டுப்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.